தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 281 பிலவ வருடம், ஆடி மாதம் 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (20.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 09, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

அடுத்த தேர்தலிலும் போட்டியிடுவேன்!

மனந்திறந்தார் ஜனாதிபதி கோட்டா

•நா. தினுஷா

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட தாம் பெரிதும் விருப்பம் கொண்டிருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுடன் நேற்று சந்திப்பொன்றை நடத்தியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எனது கொள்கைகள், வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இன்னும் மூன்று வருடங்கள் போதாது. அதற்குப் பின்னரும் 5 வருடங்கள் தேவை. அதனால் எனது வேலைத்திட்டங்களை முழுமைப்படுத்த 8 வருடங்கள் இன்னும் தேவையென்பதால் அடுத்த தேர்தலில் போட்டியிடும் எண்ணமுண்டு. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் நாங்கள் மிகவும் முக்கிய விடயங்களை செய்திருக்கிறோம். தடுப்பூசி வழங்கலை துரிதப்படுத்தியுள்ளோம். சேதனப் பசளையை அறிமுகப்படுத்தி விவசாயத்துறையை முன்னேற்றவும் திட்டங்களை வகுத்துள்ளோம் என்றும் இங்கு குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி.

ஆபத்தில் தலைநகர்; 30 வீதமானோருக்கு டெல்ட்டா

•யோ.தர்மராஜ்

கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களில் 20 – 30 வீதமானவர்களுக்கு டெல்ட்டா திரிபு இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளர்களிடமிருந்து எடுக்கப்பட்ட வைரஸ் மாதிரிகளை பரிசோதித்ததன் ஊடாக இந்த விடயம் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 02≫

ரிஷாட் வீட்டில் சிறுமியை துன்புறுத்தியது யார்?

பல கோணங்களில் தீவிர விசாரணை

•யோ.தர்மராஜ்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய நிலையில், தீக்காயங்களுடன் உயிரிழந்த சிறுமி தொடர்பாக குறித்த சிறுமியின் தாய், ரிஷாட் பதியுதீனின் மனைவியின் தந்தை மற்றும் தாயிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுமியின் பிரேத பரிசோதனையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 02≫

நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

பிரதமர் மஹிந்த சபையில் அறிவிப்பு

•சபை செய்தியாளர்கள்

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவிருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 02≫

பள்ளிவாசல் வளாகம் தவிர்ந்த இடங்களில் பிராணிகளை அறுப்பதற்கு தடையில்லை



வக்பு சபை அறிவிப்பு

நாட்டில் பள்ளிவாசல் வளாகம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் குர்பான் மிருகங்களை அறுப்பதற்கு எவ்விதத் தடையும் விதிக்கப்படவில்லையென முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக வக்பு சபை அறிவித்துள்ளது. இதன்பிரகாரம் கடந்த 13ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் மேற்படி விடயத்துக்கு எந்த நபர் மீதும்... 02≫

பிரேரணைக்கு மொட்டு கட்சி ஆதரவளிக்க வேண்டும்

எதிர்க்கட்சி வேண்டுகோள்

•சபை செய்தியாளர்கள்

அரசாங்கம் 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு முன்னுரிமையளித்து செயற்படுவதாக இருந்தால் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாக... 02≫

காட்டுமிராண்டிப் போக்கில் தோட்ட நிர்வாகங்கள்

02≫

அரசு அமைதிகாப்பதாக வடிவேல் சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

ரிஷாட்டை வெளியேற்றுங்கள்; எதிர்க்கட்சியிடம் காஞ்சன கோரிக்கை

சிறுமி உயிரிழந்தமை குறித்து ஏன் வாய்த்திறக்கவில்லையெனவும் கேள்வி

•சபை நிருபர்கள்

ஜனநாயகத்தை பற்றி பேசும் எதிர்க்கட்சியினர், ரிஷாட் பதியுதீனின் வீட்டில் தீயிட்டு உயிரிழந்துள்ள மலையகத்தைச் சேர்ந்த சிறுமி குறித்து நாடாளுமன்றத்தில் வாய்த்திருக்காதுள்ளதாக... 02≫

க.பொ.த. உயர்தர - புலமைப்பரிசில் பரீட்சைகள் நவம்பரில் இடம்பெறும்

கல்வி அமைச்சர் அறிவிப்பு

•யோ.தர்மராஜ்

கொவிட் தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளை நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்டி, உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 15 முதல் டிசம்பர் 10ஆம் திகதிவரையும், 5ஆம் தரப்... 02≫

உலகளவில் 50,000 பேரின் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்ட இஸ்ரேல் உளவு செயலி

சமூக ஊடகங்களில் பரபரப்பு சர்ச்சை

இஸ்ரேலின் கண்காணிப்பு நிறுவனமான என்எஸ்ஓ அமைப்பின் பெகாசஸ் செயலி மூலம் உலகிலுள்ள 50,000 பேரின் மொபைல் போன் ஒட்டுக்கேட்கப்பட்ட அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவையிலுள்ள இருவர், உயர்நீதிமன்ற நீதிபதி உள்ளிட்டவர்களின் தொலைபேசியும் இந்த... 02≫

நக்கல் நமசிவாயம்

நிறையப்பேர் மூன்றுவேளை சாப்பாட்டுக்கே வழியில்லாம இருக்கிறதா நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார் பாருங்கோ...உவர்ட அண்ணர் ரெண்டு தடவைகள் சனாதிபதியா இருந்தார்... உவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரா இருந்தார்... சமல் விவசாய அமைச்சரா இருந்தார்...என்னங்கோ...

இன்று வாக்கெடுப்பு

•சபை செய்தியாளர்கள்

வலுச்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைமீது இன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட வுள்ளது.

எதிர்க்கட்சியின் கனவுகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தவிடுபொடியாகுமென அரசாங்கத்தின் முக்கிய தலைவர்கள் கூறியுள்ளதுடன், இந்த வெற்றியுடன் அரசாங்கம் மேலும் வலுவடையுமெனவும் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு உட்பட பிரதான சபை... 02≫

பெறுமதிமிக்க இரத்தினக்கற்கள் இலங்கை வங்கியின் பாதுகாப்பில்

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபை வசமிருந்த விலைமதிக்க முடியாத மிகப் பெறுமதி வாய்ந்த மூன்று இரத்தினக்கற்கள், இலங்கை வங்கியின் பாதுகாப்புப் பெட்டியில் நேற்று வைக்கப்பட்டன.

கொள்ளுப்பிட்டி பகுதியிலுள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபை கட்டிடம் தாழிறங்குகின்றமையினால், அதிகாரசபையின் நடவடிக்கைகள் தற்காலிகமாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதையடுத்து, விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லோஹான் ரத்வத்தயின் ஆலோசனைக்கமைய, தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபையின் பணிகள், நாரஹேன்பிட்டியிலுள்ள அமைச்சு கட்டடத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபையின் நடவடிக்கைகள், மீண்டும் வழமைக்குத் திரும்பும்வரை, அதிகாரசபை வசமிருந்த விலைமதிக்க முடியாத, பெறுமதி வாய்ந்த மூன்று இரத்தினக்கற்கள் நேற்று இலங்கை வங்கியின் பாதுகாப்புப் பெட்டியில் வைக்கப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உயர் பாதுகாப்புக்கு மத்தியில் இந்த இரத்தினக்கற்கள், இலங்கை வங்கிக்கு கொண்டுவரப்பட்டு, பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

ரிஷாட் வீட்டில்...

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய சிறுமி உயிரிழந்தமை தொடர்பான விசாரணைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய சிறுமி, தீக்காயங்களுடன் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலையில் வைத்து உயிரிழந்துள்ளார். இது தொடர்பான விசாரணையை பொரளை பொலிஸார் முன்னெடுத்துவருவதோடு, தற்போது அவர்களுடன் இணைந்து கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் பிரிவும் விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது.

இதேவேளை, குறித்த சிறுமியை நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டுக்கு வேலைக்காக அழைத்துவந்த நபரிடம் இன்று (நேற்று) வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. குறிப்பாக, குறித்த சிறுமி கடந்த வருடம் டயகம பகுதியிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த சிறுமியின் தாய், ரிஷாட் பதியுதீனின் தந்தை மற்றும் தாயிடம் நேற்று (நேற்றுமுன்தினம்) ஞாயிற்றுக்கிழமை வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், உயிரிழந்த சிறுமியின் பிரேத பரிசோதனையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாகவும் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார்.

இதேவேளை ரிஷாட் பதியுதீன் எம்.பி.யின் மனைவி உட்பட மூவரினது தொலைபேசி அழைப்புகளின் விபரங்கள், சிறுமியை வேலைக்கு அமர்த்திய தரகரின் வங்கிக்கணக்கு ஆகியவற்றின் விபரங்களை பொரளை பொலிஸாருக்கு வழங்குமாறு தொலைபேசி சேவை வழங்குநர் மற்றும் வங்கிகளுக்கு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

க.பொ.த. உயர்தர...

புலமைப்பரிசில் பரீட்சையை நவம்பர் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பிரீஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையை ஒக்டோபரில் நடத்தவிருந்தோம். எனினும், தற்போதைய சுகாதார நிலைமைக்கு மத்தியில் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படாமல் பரீட்சைகளை ஒத்திவைக்க முடிவு செய்தோம்.

இந்நிலையில், உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 15ஆம் திகதிமுதல் டிசம்பர் 10ஆம் திகதிவரையும், 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை நவம்பர் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் சாதாரண தரப் பரீட்சைக்கு 6 இலட்சத்து 22 ஆயிரம் பேர் பங்கேற்றிருந்தனர். கொவிட் காரணமாக அந்தப் பரீட்சைகளின் முடிவுகளை வெளியிட தாமதமாகியது. நுணகலைப் பீடங்களுக்கான பரீட்சைகளை சரியான நேரத்தில் நடத்த முடியாமற்போனது.

நுணகலைப்பீட பாடங்களுக்காக ஒரு இலட்சத்து 69 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர். நடைமுறைப் பரீட்சையை ஓகஸ்ட் 28 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 8ஆம் திகதிவரை நடத்த உத்தேசித்துள்ளோம். அதன்பின்னர் விரைவில் முடிவுகளை வெளியிடவும் எதிர்பார்க்கின்றோம். அதற்கான ஏற்பாடுகளை தற்போது முன்னெடுத்து வருகின்றோம். இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனைத்து விடயம் பற்றி அதிபர்கள் எம்மை தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

ஜூலை 26ஆம் திகதி தொடக்கம் ஒருமாதக் காலத்திற்கு பயிற்சிகளுக்காக பாடசாலைகளுக்கு அழைக்கப்படவுள்ளனர். பாடசாலை அதிபர்களால் இந்த பரீட்சை பயிற்சிகளுக்காக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை அழைத்து திட்டங்கள், கால அட்டவணை தயாரிக்கப் பட்டுள்ளன.

முறையான சுகாதார விதிமுறைகளுக்கு அமைய சமூக இடைவெளியை பேணி இந்தப் பரீட்சை பயிற்சிகளை நடத்தவும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளோம்.

இதேவேளை, பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கின்ற பணிகள் 31ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றன. எனினும், தற்போதைய நிலைமைக்கு மத்தியில் ஓகஸ்ட் 7ஆம் திகதி சனிக்கிழமைவரை இந்த விண்ணப்பங்கள் ஏற்கின்ற பணிகளை நீடித்திருக்கின்றோம் - என்றார்.

காட்டுமிராண்டிப்...

சபை செய்தியாளர்கள்

தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு எதிராக காட்டுமிராண்டி போக்கில்; நடந்துகொள்கின்ற நிலையில் தொழில் அமைச்சு கம்பனிகளை கண்டுகொள்ளாது பாரபட்சமாக செயற்படுவதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் குற்றஞ்சுமத்தினார்.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.அவர் மேலும் கூறுகையில்,

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக அதிகமாக மலையக மக்களே பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஒருபுறத்தில் பெருந்தோட்டக் கம்பனிகளின் கடுமையான காட்டுமிராண்டித்தனமான நிர்வாகம் தொடர்வதுடன், மறுபுறத்தில் அரசாங்கம் வானத்தை எட்டுமளவு எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்துவதால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நாட்டு மக்களுக்கு நிவாரணத்தை முன்னெடுப்பதற்காக வைத்துள்ள திட்டங்களை அரசாங்கம்தான் கூற வேண்டும். எரிபொருள் விலை உயர்வுக்கான வரைவிலக்கணம் அல்ல எமக்குத் தேவை. அதற்கான நிவாரணமே அவசியமாகும். பெருந்தோட்டக் கம்பனிகள் நாட்டின் சட்டத்தை மீறி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அவற்றுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்னவென கேட்க விரும்புகிறோம். மலையக மக்கள் வேறு அரசாங்கத்தை சார்ந்தவர்களா?. ஒரு நாடு ஒரு சட்டம் என்றால் தொழில் அமைச்சு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத்திரம் ஏன் அநீதியை இழைக்கிறது. தொழில் அமைச்சும், ஜனாதிபதியும், பிரதமரும், நாடாளுமன்றமும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பதில் கூறியே ஆகவேண்டும்.

முச்சக்கரவண்டி சாரதிகளும் ஏனைய சாரதிகளும் மலையகத்தில் பாரியளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார்.

ஆபத்தில் தலைநகர்...

நாட்டில் டெல்ட்டா தொற்று பரவுவது குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

டெல்ட்டா திரிபுகள் குறித்து ஆய்வுக்கு உட்படுத்தப்படும் மாதிரிகளிலிருந்தே நாங்கள் இதனை கண்டறிகின்றோம். மாறாக, பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்படும் அனைத்து நோயாளர்களின் மாதிரிகளையும் நாங்கள் ஆய்வுக்கு உட்படுத்துவதில்லை. ஆகவே, அடையாளம் காணப்படும் அனைவரின் தகவல்களும் எங்களுக்கு கிடைப்பதில்லை. எழுமாற்று கொரோனா பரிசோதனைகள் மேற் கொள்ளப்படுவதால், டெல்டா தொற்றாளர்களின் எண்ணிக்கையை துல்லியமாக வெளியிட முடியாது உள்ளது.

எனினும், 10 பேரை எடுத்துக்கொள்ளும்போது அதில் 20 வீதமானவருக்கு இந்த திரிபு இருப்பது உறுதிசெய்யப்படுகின்றது. அடுத்த 10 பேரை எடுத்துக்கொள்ளும்போது அதில் இரண்டு, மூன்று பேருக்கு இந்த திரிபு உறுதிசெய்யப்படும். அதனால் நாங்கள் நூற்றுக்கு 30 வீதம் எனக் கூறுகின்றோம். இவ்வாறான கணிப்பீடுகளையே நாங்கள் தற்போது முன்னெடுத்துவருகின்றோம்.

அதனடிப்படையில், கொழும்பு பகுதியில் சுமார் 20 முதல் 30 வீதமான மக்களுக்கு டெல்ட்டா திரிபு இனங்களாக இருக்கலாம். பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, வடக்கிலும் டெல்ட்டா திரிபு உறுதிசெய்யப்படுவதாயின் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் டெல்ட்டா திரிபு பரவி இருப்பதை உறுதிசெய்கின்றன.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, காலி, மாத்தறை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் டெல்ட்டா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதால் ஏனைய பகுதிகளில் இந்த வைரஸ் இல்லை என கூற முடியாது. ஆகவே, இந்த ஆபத்தை உணர்ந்து அனைத்து மக்களும் மிக அவதானமாக செயற்பட வேண்டும் - என்றார்.

நம்பிக்கையில்லா...

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பிக்கும்போது எழுந்த சர்ச்சையின்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

விவாதத்தின் ஆரம்பத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்து எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்காருக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், அவர் பிரேரணையை முன்வைக்காது விவாதத்தில் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்தன, விவாதத்தை ஆரம்பிக்க முன்னர் அந்தப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் என்றும் ஆனால், மரிக்கார் எம்.பி. அதனை முன்வைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதன்படி மீண்டும் அந்தப் பிரேரணையை முன்வைப்பதற்கு சபாநாயகர் மரிக்காருக்கு அனுமதி வழங்கினார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த அமைச்சர் விமல் வீரவங்ச, ஒரே விவாதத்தில் இரண்டு தடவைகள் ஒருவருக்கு பேசுவதற்கு அனுமதி வழங்க முடியாது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் பிரசன்ன ரணவீரவும் தனது ஆட்சேபணையை முன்வைத்தார்.

இதன்போது சபையில் சர்ச்சை ஏற்பட்ட நிலையில், அது தொடர்பில் குறிப்பிட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அரசாங்கம் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்ள தயாராகவே உள்ளது. இதனால் எதிர்க்கட்சியினருக்கு அதனை முன்வைக்க அனுமதி வழங்குவோம் - என்றார்.

பிரதமரின் இந்த அறிப்பைத் தொடர்ந்து ஆளும் தரப்பின் அனைத்து எம்.பிக்களும் அமைதியாக இருந்ததுடன், நம்பிக்கையில்லா பிரேரணையை மரிக்கார் எம்.பி. சபையில் சமர்ப்பித்தார்.

உலகளவில்...

செயலி மூலம் கண்காணிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரான்ஸைச் சேர்ந்த இலாபநோக்கமற்ற அமைப்பான ஃபர்மிடன் ஸ்டோரிஸ் மற்றும் அம்னெஸ்டி இன்டர்நஷனல் ஆகியவை இணைந்து புலனாய்வு செய்து இதை வெளியிட்டுள்ளன.

பிரதமர் மோடியின் அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர்கள் இருவர், எதிர்க்கட்சித் தலைவர்கள் மூவர், நீதிபதி, 40இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள் என இந்தியாவில் மட்டும் 300இற்கும் மேற்பட்டோரின் கையடக்கத் தொலைபேசிகள் இஸ்ரேலிய உளவுமென்பொருளான பெகாசஸ் மூலம் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளது.

ஒட்டு கேட்பில் கசிந்த கையடக்கத்தொலைபேசி எண்கள் குறித்து தடயவியல் பரிசோதனை நடத்தப்பட்டதில், 37 செல்போன் எண்களில் 10 எண்கள் இந்தியர்களுடையது என்பது தெரிய வந்துள்ளது.

இந்த தொழில்நுட்ப பகுப்பாய்விற்கு ஒரு தொலைபேசியை உட்படுத்தாமல், அந்த தொலைபேசி ஒட்டுக்கேட்கப்படுகிறதா என்பதை உறுதியாகக் கூற முடியாது

இந்தியாவின் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று தொடங்கவிருக்கும் நிலையில், இந்த விவகாரம் வெளியாகியுள்ளது. இந்த விவகாரத்தை மக்களவையிலும், மாநிலங்களையும் எழுப்பி எதிர்க்கட்சிகள் பெரிதாக பிரச்சினையை கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து ஒத்திவைப்பு விவாதம் கொண்டு வரவும் எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது.

தி வயர் இணையதளம் வெளியிட்ட செய்தியின்படி, “இந்தியாவில் 40இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், நீதிபதி ஒருவர், மத்திய அமைச்சரவையில் இரு அமைச்சர்கள், பாதுகாப்பு அமைப்பில் பணியாற்றும் முக்கிய அதிகாரிகள், முன்னாள் அதிகாரிகள், தொழிலதிபர்கள், அரசியலமைப்புச் சட்ட பதவியில் இருப்போர் என பலருடைய கையடக்கத் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளன.

ஏஎவ்பி, சிஎன்என், தி நியூயோர்க் ரைம்ஸ், அல்ஜஸீரா, ஹிந்துஸ்தான் ரைம்ஸ், இந்தியா டுடே, நெட்வொர்க்18, தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளேடுகளின் பத்திரிகையாளர்களின் கையடக்கத் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெகாசஸ் மென்பொருள் மூலம் ஐபோன்கள் மற்றும் என்ரோய்ட் தொலைபேசிகளைக் கண்காணித்து அதிலுள்ள குறுந்தகவல்கள், மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் ஆகியவற்றை உளவு பார்த்து ஒட்டுக்கேட்க முடியும்.

இந்தியா, அசர்பைஜன், பஹ்ரைன், ஹங்கேரி, கசகஸ்தான், மெக்சிகோ, மொராக்கோ, ரவான்டா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்தவர்களின் எண்களே பெரும்பான்மையாக கண்காணிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இன்று வாக்கெடுப்பு...

நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைமீதான விவாதம் ஆரம்பமானது. நேற்று மாலை 5.30 மணிவரை விவாதம் தொடர்ந்தது. ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினர்.

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக எதிரணி உறுப்பினர்களும், எதிராக ஆளுங்கட்சி உறுப்பினர்களும் உரையாற்றியதுடன், அதற்கான காரணங்களையும் முன்வைத்தனர். இன்று இரண்டாவது நாளாகவும் நம்பிக்கையில்லா பிரேரணைமீது விவாதம் தொடரவுள்ளது.

இதன்போது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக அரச தலைமைக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட தோழமைக் கட்சிகளும் வாக்களிக்கவுள்ளன.

அத்துடன், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஏனைய சில எதிர்க்கட்சிகளும் எதிராக வாக்களிக்கவுள்ளன.

நம்பிக்கையில்லா பிரேரணையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்போமென ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபையில் கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

அதேவேளை, நம்பிக்கையில்லா பிரேரணையில் திருத்தம் மேற்கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை முன்வைத்துள்ளார். அமைச்சர் என்பதற்கு பதிலாக அமைச்சர்கள் என்பதை உள்ளடக்குமாறு குறிப்பிட்டு குறித்த பிரேரணையை ஒட்டுமொத்த அமைச்சரவைக்கு எதிரான பிரேரணையாக மாற்றுவதற்கு முன்மொழிந்தார்.

பள்ளிவாசல் வளாகம்...

எவ்விதத் தடையும் விதிக்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பள்ளிவாசல்களில் மேற்கொள்ளப்படவேண்டிய கொவிட் -19 தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு,

01. எந்த நேரத்திலும் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வழிபாட்டாளர்கள் 100 (நூறு மட்டும்) அனைத்து கோணங்களிலிருந்தும் தனி நபர்களிடையே ஒரு மீற்றர் உடல் தூரத்தைப் பேணுதல் வேண்டும்.

02. வரிசைகள் (சப்க) இடையே ஒரு வரிசை (சப்க) இடைவெளி இடப்பட்டு தொழுகைகள் நடத்தப்பட வேண்டும்.

03. ஜும்ஆ தொழுகையில் குத்பா மற்றும் தொழுகை 30 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

04. பள்ளிவாசலில் அனைவரும் எல்லா நேரங்களிலும் முகக்கவசம் (மாஸ்க்) அணிய வேண்டும்.

05. தொழ வருபவர்கள் தங்களது முஸல்லாக்களைக் கொண்டுவர வேண்டும்.

06. தொழுகைக்காக வீட்டிலிருந்து வுழூ செய்து கொண்டுவர வேண்டும்.

07. வெளியூர் பயணிகளுக்கு பள்ளிவாசல்களில் தொழுவதற்கு அனுமதியில்லை.

08. காய்ச்சல், இருமல், தடுமல், தொண்டை வலி, மூச்சுத்திணறல் போன்றவை உள்ளவர்கள் பள்ளிவாசல்களுக்கு செல்லக்கூடாது.

09. கை குலுக்குதல் அல்லது கட்டியணைத்தல் (முஸாபஹா செய்தல்) போன்றன தவிர்க்கப்படல் வேண்டும்.

10. பள்ளிவாசல் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் தேவையற்ற வகையில் சுற்றித்திரிதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

11. மேற்குறிப்பிடப்பட்ட சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அனைத்து வழிகாட்டுதல்களும் பின்பற்றப்பட வேண்டும்.

ரிஷாட்டை...

இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் தெரிவித்தார்.

முடிந்தால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி அவரை வெளியேற்றுங்கள் எனவும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனநாயகத்தைப் பற்றி கடந்த காலத்தில் பேசியவர்கள் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் சிறுமி ஒருவர் தீயிட்டு உயிரிழந்துள்ளார். இது பற்றி நாடாளுமன்றத்தில் ஒரு வார்த்தை பேசவில்லை. எதிர்க்கட்சிகளின் கட்சித் தலைவர் ஒருவரது வீட்டில்தான் இந்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

சிறுமி உயிரிழந்துள்ளமை மாத்திரமல்லாது பொலிஸ் விசாரணைகளில் துஷ்பிரயோகத்துக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முடிந்தால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி அவரை வெளியேற்றுங்கள். குறைந்தபட்சம் தற்காலிகமாகவேனும் தடை விதியுங்கள்.

கடந்த காலத்தில் அமைச்சர் விமல் வீரவங்சவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தீர்கள். ஆனால், எதிர்க்கட்சிகளாக ஐ.தே.கவும், ஜே.வி.பியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த சிறுமி பற்றி ஒருவார்த்தையைக்கூட பேசவில்லை.

முடிந்தால் இந்த விடயத்தில் முதுகெலும்புடன் செயற்படுங்களென கோரிக்கை விடுக்கிறோம் - என்றார்

பிரேரணைக்கு...

வாக்களிக்க வேண்டுமென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

எரிபொருள் விலை அதிகரிப்பு காரமாக முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள், துவிச்சக்கரவண்டி ஓட்டுனர்கள், பாடசாலை வேன் உரிமையாளர்கள், பஸ் உரிமையாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதுடன், பேக்கரி உற்பத்திகள் மற்றும் மரக்கறிகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், தேங்காய் விற்பனையாளர்கள், ஹோட்டல் துறையில் உள்ளவர்கள் என நாட்டின் அனைத்து பொருளாதாரத் துறையினரும் இதனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன், அமைச்சர் கம்மன்பில உடனடியாக அமைச்சுப் பதவியை துறக்கவேண்டுமெனவும் கூறினர். இன்று அவர்கள் உடையை அணிந்துகொண்டா நாடாளுமன்றம் வந்துள்ளரென கேள்வியெழுப்ப விரும்புகிறோம். நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்ப்பை வெளியிடுபவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட 69 இலட்சம் மக்களின் ஆணையையே மீறுகின்றனர்.

அந்த மக்களின் எதிர்பார்ப்பைதான் காட்டிக்கொடுக்கின்றனர்.

நம்பிக்கையில்லா பிரேரணை தோற்றாலும், வென்றாலும் எங்களுக்கு வெற்றியே. எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்ட பின்னர் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர் உதயகம்மன்பில, எரிபொருள் விலையை நான் அதிகரிக்கவில்லை அரசாங்கமே அதிகரித்தது என்றும், டொலர் இல்லாத பிரச்சினை காரணமாகவே அதனை விலையை அதிகரிக்கவேண்டி வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அத்துடன், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோர் இருந்த வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவில் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை, இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தோற்றாலும் தனக்கு வெற்றியே, வென்றாலும் தனக்கு வெற்றியே என்று அமைச்சர் கம்மன்பில தெரிவித்துள்ளார். அவர் என்ன அடிப்படையில் கூறுகின்றார் என்று தெரியவில்லை. ஆனால், அவர் கூறுவதை போன்று எங்களுக்கும் அப்படித்தான். இதில் தோற்றாலும் எங்களுக்கு வெற்றியே, வென்றாலும் எங்களுக்கு வெற்றியே என்பதனையும் கூறிக்கொள்கின்றேன்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2013 ஆம் ஆண்டுமுதல் சிறந்த வருமானத்தைப் பெற்று வருகின்றது. ஆனால், அமைச்சரோ பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தில் இருப்பதாக கூறியுள்ளார். இது உண்மையில்லை. அந்நிய செலவணி பிரச்சினை காரணமாகவே அது நஷ்டமாக தெரிகின்றது. அது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய பிரச்சினை அல்ல. அது திறைசேரியுடன் தொடர்புடைய பிரச்சினையே இதனை சரியாக புரிந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, உதய கம்மன்பில தேசப்பற்றாளர் போன்று தூய்மையான ஹெல உறுமயவின் தலைவராக இருந்தார். நல்லாட்சிக் காலத்தில் அரச சொத்துகள் விற்கப்படுவதாக வீதிகளில் போராடினார். இப்போது என்ன செய்கின்றார். பெற்றோலிய சுத்திகரிப்பை வெளிநாட்டவர்களுக்கு வழங்க அமைச்சரவைப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

இந்நிலையில், தேசிய பாதுகாப்பிலேயே நாட்டின் பொருளாதார பாதுகாப்பு உள்ளிட்டவை தங்கியுள்ளது.

இதன்படி எரிபொருள் சுத்திகரிப்பு எம்மிடம் இருக்கவேண்டும். ஈரான், குவைட், டுபாய், சீனா உள்ளிட்ட நாடுகளில் அவர்களுக்கு சொந்தமானதாகவே பெற்றோலிய சுத்திகரிப்பு உள்ளன. ஆனால், இங்கு தனியார் மயப்படுத்தி வெளிநாட்டவர்களுக்கு வழங்குவது பாரதூரமான பிரச்சினையே - என்றார்.

தடுப்பூசி ஏற்றிக்கொண்ட வைத்தியருக்கு கொரோனா

பதுளை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியர் ஒருவருக்கு கொரோனா தொற்று நேற்றுமுன்தினம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறித்த வைத்தியர் கொவிட் - 19 தொற்றுக்கான இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பதுளை மாவட்ட இணைப்பாளர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

வைத்தியசாலையில் கடமையாற்றிய அந்த வைத்தியருக்கு கொரோனா தொற்றுக்குரிய அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வைத்தியருடன் தொடர்பிலிருந்த ஏனையவர்களை தனிமைப் படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்



தகவல் மூலம்: கொவிட் - 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான தேசிய செயலணி

கொவிட் தடுப்பூசியேற்றல் நிபுணர் குழுவிலிருந்து மூவர் இராஜிநாமா

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கொவிட்- 19 தடுப்பூசியேற்றல் தொடர்பான நிபுணர் குழுவின் மூன்று உறுப்பினர்கள் இராஜிநாமா செய்துள்ளனர்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவெர்க் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பின்னர் இவர்கள் இராஜிநாமா செய்துள்ளனர்.

08 உறுப்பினர்களைக்கொண்ட இந்தக் குழுவிலிருந்து, வைத்தியர் ரஜீவ டி சில்வா, வைத்தியர் காந்தி நாணயக்கார மற்றும் பேராசிரியர் சன்ன ரணசிங்க ஆகியோர் இவ்வாறு இராஜிநாமா செய்துள்ளனர்.

சீன தயாரிப்பான சினோவெர்க் தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதி வழங்குவதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அந்த தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதியளித்துள்ளமையே தாம் இராஜிநாமா செய்வதற்கு காரணம் என இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொவிட் -19 டெல்ட்டா பிறழ்விற்கு மத்தியில், சினோவெர்க் தடுப்பூசி போதிய பலனளிக்காத தடுப்பூசி என கொவிட் -19 தடுப்பூசி தொடர்பான நிபுணர் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சினோவெர்க் தடுப்பூசி இரு தடவைகள் ஏற்றப்பட்டு 06 மாதங்களின் பின்னர் மூன்றாவது தடுப்பூசியும் ஏற்றப்பட வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒருதொகுதி பைசர் தடுப்பூசிகள் நாட்டுக்கு

அமெரிக்காவில் உற்பத்திசெய்யப்படும் பைசர் தடுப்பூசியின் மேலும் ஒரு தொகுதி நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றின் மூலம் அதிகாலை 2.15 மணியளவில் 70,200 தடுப்பூசிகள் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், குறித்த தடுப்பூசிகள் கொழும்பு மத்திய சேகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன

கதிர்காம பெரஹரவில் பங்கேற்ற கலைஞர்கள் 11 பேருக்கு தொற்று

கதிர்காமம் தேவாலயத்தின் எசெல பெரஹரவுக்குச் சென்ற நடனக்குழுவினரில் 15 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக தென்மாகாண சுகாதார சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலியிலுள்ள கலாசார நிலையமொன்றில் தங்கியிருந்த நடனக்குழுவினருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 11 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. அதேபோல் மாத்தறையில் இளைஞர் பௌத்த சங்க நிலையத்தில் தங்கியிருந்த 04 நடனக் கலைஞர்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அறிக்கைகள் நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு தொற்றுக்குள்ளானோர் கதிர்காமம் தேவாலயத்தின் பெரஹர நிகழ்வில் பங்கேற்றவர்களாவர்.

இவர்களை தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டாம் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் டெல்ட்டா திரிபுகள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வந்த நிலையில், பயணக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது பொருத்தமானதல்லவென பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

டெல்ட்டா வகையானது எதிர்காலத்தில் நாட்டில் பரவக்கூடிய பிரதான கொவிட் வகையாக மாறும் என அதன் தலைவர் உபுல் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசி திட்டத்தை வெற்றிகரமாக செயற் படுத்திய பல நாடுகளும் டெல்ட்டா திரிபு பரவுவதால் பயணக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக உபுல் ரோஹண கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

“அடுத்த சில நாட்களில், கொவிட்-19 டெல்ட்டா வகை இலங்கையின் முன்னணி தொற்றுநோய்களில் ஒன்றாக மாறும். டெல்ட்டா வகை முதன்மையான இனமாக மாறினால், இலங்கை முன்னெப்போதையும்விட ஆபத்தான ஒரு தொற்று நோயை எதிர்கொள்ளும்.

இந்தச் சூழ்நிலையை அரசாங்கமும் மக்களும் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம். எதிர்காலத்தில் நாட்டில் ஒரு பேரழிவு சூழ்நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அது மிகவும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும்'' - என்றார்.

இன்றைய ராசி பலன்

நாள்: 20.07.2021 செவ்வாய்க்கிழமை

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

மேடம் — வேலைகளின் அவசரங்களால் சிறிய உடல்நல சோர்வு ஏற்படலாம். வீட்டில் இருப்பவர்களின் மனக்குறைகளை கேட்டு, ஆறுதல் தருவது நன்று. ஆராய்ந்த செயல்கள் மட்டுமே நன்மை.

ரிஷபம் — வியாபார தேவைகளுக்கு உதவி கிடைக்கும். எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி கிடைக்கப் பெறலாம். குழந்தைகளின் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

மிதுனம் — பணியிடங்களில் சிறிய மனக்குறைகள் ஏற்பட்டாலும், சிறப்புடன் நிறைவேறிய வேலைகளில் உங்கள் திறமை பாராட்டப்படும்.

கடகம் — பணவரவு உண்டாகலாம். ஆடம்பர செலவுகளில் கவனம் தேவை. வீட்டின் மகிழ்ச்சி நிறைவை தரும். கணித கல்வியில் நலம் தரும்.

சிம்மம் — இறைவணக்கம் தேவை. பணியிடங்களில் சிறிய விட்டுக்கொடுத்தல் நிலைமைகளை சீராக்கும். வீட்டில் வயதில் பெரியவர்களின் அறிவுரைகள் உதவலாம்.

கன்னி — வணிக விடயங்களில் நல்ல ஆரம்பம். சொத்து சுகங்களில் தடைகள் நீங்கப்பெற்று, உங்களுக்கு உரித்தான நிலைமைகள் உருவாகும்.

துலாம் — அரசாங்க பணியில் இருப்பவர்கள் சில நன்மைகள் பெறலாம். உடல்நலம் மேம்படும். வீடு/காணி வாங்கும் விடயங்களில் நன்மை கிடைக்கும்.

விருச்சிகம் — சகோதரர்களின் உதவி நிறைவை தரும். திறமையால் ஆக்கபூர்வமான எண்ணங்கள் ஈடேறலாம்.

தனுசு — இன்று மனநிலையை நல்ல நிலையில் வைத்திருப்பது தெளிவு தரும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனைகளை ஏற்று செயற்பட்டால் நன்மை.

மகரம் — பரம்பரை சொத்துகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் நல்ல நிலைமை உருவாகலாம். பணியிடங்களில் வேலைச்சுமை அதிகரிப்பும், சிலருக்கு புதிய வாய்ப்புகள் உருவாகுதலும் நடைபெறலாம்.

கும்பம் — தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். கடன் பிரச்சினைகள் குறையும் அறிகுறி தென்படும். பணியிடங்களில் திறமையாக செயற்படுவீர்கள்.

மீனம் — மற்றவர்களின் விடயங்களில் தலையீடு செய்யாமல் இருப்பது நல்லது. வருவாய் அதிகரிக்கும். பணியிடங்களில் சிறிய பிரச்சினை ஏற்படலாம்.

தடுப்பூசிகளை வேகமாக ஏற்றும் நாடுகளின் வரிசையில் இலங்கை

இராணுவத் தளபதி தகவல்

கொரோனா தடுப்பூசிகளை வேகமாக பெற்றுக்கொடுக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் உள்ளடங்குவதாக இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர் பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேற்றுமுன்தி னம் மாலைவரை 73 இலட்சத்து 61 ஆயிரத்து 893 தடுப்பூசிகள் நாடுமுழுவது ம் வழங்கப்பட்டுள்ளன. தடுப்பூசிகளை மிக வேகமாக ஏற்றும் நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

ஓகஸ்ட் மாத இறுதிக்குள் மேல் மாகாணத்திலுள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை , நாட்டில் 55 இலட்சத்து 78 ஆயிரத்து 909 பேருக்கு ஏதாவதொரு தடுப்பூசி முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 16 இலட்சத்து 68 ஆயிரித்து 74 பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன - என்றார்.

துளிச் செய்திகள்

நாட்டில் நேற்றுமுன்தினம் 94 ஆயிரத்து 291 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாக கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

பியகம, பண்டாரிவத்தவிலுள்ள அரச வங்கி ஊழியர்கள் ஐவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து வங்கியை தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பேராதெனிய போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய பாதுகாப்பு ஊழியர்கள் 40 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதுகாப்பு பணியாட்தொகுதி உடனடியாக அகற்றப்பட்டுள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையின் புற்றுநோயாளர்கள் பிரிவில் 20 பேருக்கும் தாதியர் இருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை நகர சபைத் தலைவர் மொஹமட் அமீர் நஸீருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 245 பேர் நேற்றுக்காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விடுமுறைக்காலம் என்பதால் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறுவோரைக் கைதுசெய்வதற்காக எதிர்வரும் புதன்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்றுமுன்தினம் மேலும் 843 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து வைத்தியசாலைகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 20ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

சுகாதாரத் தரப்பினரிடையே ஒத்துழைப்பு அவசியம்!

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து டெல்ட்டா கொவிட் திரிபுகள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வந்த நிலையில், பயணக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது பொருத்தமானதல்ல என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டெல்ட்டா வகையானது எதிர்காலத்தில் நாட்டில் பரவக்கூடிய பிரதான கொவிட் வகையாக மாறுமென அதன் தலைவர் உபுல் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்திய பல நாடுகளும் டெல்ட்டா கொவிட் திரிபு பரவுவதால் பயணக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக உபுல் ரோஹண தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும் அடுத்த சில நாட்களில், கொவிட் -19 டெல்ட்டா வகை இலங்கையின் முன்னணி தொற்றுநோய்களில் ஒன்றாக மாறும். டெல்ட்டா வகை முதன்மையான இனமாக மாறினால், இலங்கை முன்னெப்போதையும் விட ஆபத்தான ஒரு தொற்றுநோயை எதிர் கொள்ளும். இந்தச் சூழ்நிலையை அரசாங்கமும் மக்களும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். எதிர்காலத்தில் நாட்டில் ஒரு பேரழிவு சூழ்நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அது மிகவும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும் நிலையே இருக்கிறது.

இதேவேளை, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கொவிட் – 19 தடுப்பூசியேற்றல் தொடர்பான நிபுணர் குழுவின் மூன்று உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை, சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவெக் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பின்னர் இவர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

08 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவிலிருந்து, வைத்தியர் ரஜிவ டி சில்வா, வைத்தியர் காந்தி நாணயக்கார மற்றும் பேராசிரியர் சன்ன ரணசிங்க ஆகியோரே இவ்வாறு இராஜினாமா செய்துள்ளனர்.

சீனத் தயாரிப்பான சினோவெக் தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதி வழங்குவதற்கு தாம் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதியளித்துள்ளமையே தாம் இராஜினாமா செய்வதற்குக் காரணம் என இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொவிட்-19 டெல்ட்டா பிறழ்விற்கு மத்தியில், சினோவெக் தடுப்பூசி போதிய பலனளிக்காதென கொவிட்-19 தடுப்பூசி தொடர்பான நிபுணர் குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை பொறுத்தவரை அரச மட்டத்திலான செயற்பாடுகளில் ஒழுங்கின்மை இருப்பதையே மேற்படி செயற்பாடுகள் மூலம் அறியமுடிகின்றது. கொரோனா வைரஸிலிருந்து தப்பிக்கும் வகையில் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென மக்களிடம் கேட்டுக்கொள்ளும் அரசு, சில தீர்மானங்களை எடுக்கும்போது முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்கிறது.

மாகாணங்களுக்கிடையில் பொதுப் போக்குவரத்தை இடைநிறுத்தியுள்ள அரசு மாகாண எல்லைகளில் மக்கள் மாறிச் செல்ல அனுமதித்திருக்கிறது. மாகாணங்களின் எல்லைகள் வரை செல்லும் பஸ்களிலிருந்து இறங்கும் மக்கள், மாகாண எல்லையைக் கடந்து அடுத்த பஸ்களில் ஏறுகின்றனர். அப்படியானால் கொரோனாவை பரப்புவது மக்களா அல்லது பஸ்களா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அதே போல் பொது இடங்களை மக்களுக்காக திறந்துவிட்டுள்ள அரசு, மக்கள் அந்த இடத்திற்கு வருவதற்கு கட்டுப்பாடுகளை விதிக்கிறது. முறையான ஒருங்கிணைப்பின்மையால் இன்னமும் கொரோனா கட்டுப்பாட்டு செயற்பாடுகள் சீராக நடைபெறுவதாக தெரியவில்லை.

கொரோனா பரவல் சூழ்நிலை இலங்கை நிர்வாக அதிகாரிகளை பல பிரிவுகளாக்கியுள்ளது. மருத்துவர்கள் ஒரு பக்கம், சுகாதார பணியாளர்கள் இன்னொரு பக்கம், அரச நிர்வாகிகள் வேறொரு பக்கமென செயற்படும் நிலைமையே இருக்கிறது. பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மக்களோடு மக்களாக நிற்பவர்களாக இருந்தாலும் அவர்களின் கருத்துகள் உரியவாறு செவிமடுக்கப்படுவதில்லை. அதேபோல் கொரோனா தடுப்பு விடயத்தில் மருத்துவர்களின் அறிவுரைகளும் அரச அதிகாரிகளால் பின்பற்றப்படாத நிலைமை இருக்கிறது.

இப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படாத பட்சத்தில் நிலைமை மேலும் மோசமடையலாம்.

சிறப்பு வாய்ந்த ஆடி செவ்வாய் வழிபாடு

ஆடி மாத வெள்ளிக்கிழமைகள் மட்டுமல்ல, ஆடி செவ்வாய்க்கிழமைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆடி செவ்வாயானது, அம்மன் உள்ளிட்ட சகல பெருந்தெய்வங்கள் மற்றும் முருகன் வழிபாட்டுக்கு உகந்தது என புராணங்கள் சொல்கிறது.

முருகப்பெருமானை வழிபட்டு விரதமிருக்க விரும்பினால் அந்த முருகப் பெருமானுக்குரிய மந்திரங்கள் அல்லது பாடல்களைப் பாடி வணங்கி, பின்பு அருகிலுள்ள முருகப்பெருமான் கோவிலுக்கோ அல்லது சந்நிதிக்கோ சென்று வணங்க வேண்டும். இந்த ஆடி செவ்வாய்களில் இவ்வாறு விரதமிருந்து வழிபடுவதால் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் நீங்கும்.

இந்த ஆடி செவ்வாய்களில் அம்மனுக்கு விரதமிருப்பவர்கள் வீட்டில் பூஜையறையில் விளக்கேற்றிய பின்னர் அம்மனுக்குரிய மந்திரங்களைக் கூறி வணங்கி, பிறகு அருகிலுள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று வணங்க வேண்டும். இதனால் ஆரோக்கியம் மேம்படும், திருமணம், புத்திர பேறு கிட்டும். கடன்கள் தீரும். பதினாறு பேறும் கிட்டும். ஆடியில், செவ்வாய்க்கிழமை தோறும் சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பதால், மாங்கல்ய பலம் கூடும். அதேபோன்று ஆடி மாதச் செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் ஔவையார் விரதம் கடைப்பிடிக்கும் வழக்கமும் உண்டு. கணவனின் ஆயுள் நீடிக்கவும், குழந்தை வரம் வேண்டியும், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கவும், கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமண வரம் கிடைக்கவும் இந்த விரத வழிபாட்டின் மூலம் பிரார்த்தித்துக் கொள்வார்கள். வசதியுள்ளவர்கள், கடைசி செவ்வாய்க்கிழமையன்று குழந்தைகளை வீட்டுக்கு வரவழைத்து அவர்களை தெய்வமாக வழிபட்டு விருந்தளிப் பார்கள்.

இந்த செவ்வாய்க்கிழமைகளில் அம்பாளை வழிபட்டு, மங்கல கௌரி விரதம் கடைப்பிடிப்பது விசேட பலன்களைத் தரும். ஆடி செவ்வாய்கிழமைகளில் அன்னதானம் செய்தால், மற்ற நாட்களில் செய்வதைவிட 48 மடங்கு அதிக பலன்கள் கிடைக்கும். செவ்வாய்க் கிரகத்தால் பாதிக்கப்பட்டவர்கள், ஆடி செவ்வாய் அதிகாலை எழுந்து குளித்து சிவப்பு நிற ஆடையணிந்து அம்மன் கோவிலுக்குச் சென்று, செந்நிற மலர் அல்லது செண்பக மலர்களால் அர்ச்சனை செய்யவேண்டும். நைவேத்தியத்திற்கு சிவப்பு நிற பழங்களைப் படைப்பது சிறந்தது. காலையில் அம்மனையும், மாலையில் முருகனையும் வணங்குவது சிறப்பு. செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் துவரை தானம் செய்யலாம். சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள் குங்குமம், தாம்பூலம் கொடுக்க வேண்டும். செம்பவள மோதிரமோ அல்லது கழுத்து சங்கிலியில் செம்பவளம் பதித்த டொலர்களையோ அணிவது கூடுதல் பலனைத் தரும். ஆடி செவ்வாயில் விரதமிருப்பவர்களுக்கு அம்மன் அருள் கிட்டும். இரத்த சம்பந்தமான நோய்கள் தீரும்.

கடைசி ஆடிச்செவ்வாயன்று கிராமத்திலுள்ள வசதி படைத்த வீட்டார்கள் முறைப்படி வருடத்திற்கு ஒருவராக முன்னின்று, கிராமத்திலுள்ள எல்லாக் குழந்தைகளையும் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவர்களை தெய்வமாக வழிபட்டு வடை, பாயாசத்துடன் விருந்தளிப்பர். சிலர் புதிய பாவாடை, சட்டைகள் வாங்கிக் கொடுப்பதுடன் அதனுடன் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், மஞ்சள், காசு வைத்துக் கொடுப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது. காலத்தின் மாற்றங்களினால் இத்திருவிழா அநேக இடங்களில் கொண்டாடப்படாமல் நின்று விட்டது. சில கிராமங்களில் மட்டும் இதை மறைய விடாமல் பெரியோர்கள் நடத்தி வருகிறார்கள்.

ஆடிசெவ்வாய் விரதமிருந்து முருகனை, அம்மனை வழிபட்டு வாழ்வில் வளம்பெறுவோம்.

நவக்கிரகங்களில் செவ்வாயோடு நேரடி சம்பந்தமுடையவர் முருகன். எனவே, செவ்வாய்க்கிழமை விரதம் முருகனுக்கு மிகவும் உகந்ததாகிறது. அதிலும் ஆடிச் செவ்வாய்க்கிழமைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

செவ்வாய் சம்பந்தமுடைய முருகன் தலங்களுக்குச் சென்று அங்கு இரவு தங்கி ஓர் நாள் விரதமிருந்து அத்தலத்திலுள்ள முருகன் சந்நிதியில் அபிஷேக ஆராதனைகள் செய்து திருமுருகனை பூஜித்தால் பலன்கள் அதிகம்.

செவ்வாய்க்கும் ஸ்ரீமுருகப்பெருமானுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உண்டு. செவ்வாய்க்கும், முருகனுக்கும் மட்டுமல்ல, செவ்வாய்க்கும், பூமிக்கும் கூட தொடர்புகள் உண்டு. செவ்வாய்க்கும், பூமிக்கும், பூமிக்கும் முருகனுக்கும், செவ்வாய்க்கும், முருகனுக்கும் தொடர்புள்ளதால்தான் பூமியில் நாம் செவ்வாயின் அம்சமாக முருகனை வழிபடுகிறோம். இந்த காரணத்தால்தான் செவ்வாய்க்கிழமை முருகனை வழிபடவும், விரதமிருக்கவும் ஏற்றதொரு புனித நாளாக இருக்கிறது.

திருமணத் தடைகளை நீக்கும் ஆடி செவ்வாய் விரதம்

ஆடி செவ்வாய்க் கிழமைகளில் வீட்டின் வாசலில் கோலமிட்டு, பூஜையறையில் குத்துவிளக்கேற்றி ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் மற்றும் பல அம்மன் பாடல்களைப் பாடுவது மிகவும் நல்லது.

பால் பாயாசம், சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றை நிவேதனம் செய்வார்கள். பெண் குழந்தைகளை அம்மனாகப் பாவித்து, உணவளித்து, அவர்களுக்கு ரவிக்கை, தாம்பூலம், வளையல், குங்குமச்சிமிழ், சீப்பு, கண்ணாடி, மருதாணி, மஞ்சள் போன்றவற்றைக் கொடுத்து சிறப்பிக்க தேவியின் அருள் கிடைக்கும். ஆடி செவ்வாயன்று தலை குளித்து அம்மனை வழிபட திருமாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். இது தவிர ஆடி செவ்வாயில் மேற்கொள்ளும் விரதம் குறிப்பிடத்தக்கது. இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால் விரைவில் திருமணம் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும்.

காளானிலிருந்து செயற்கைத் தோல்

பின்லாந்து விஞ்ஞானிகள், காளான் மூலம் செயற்கைத் தோலை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர். சில தாவரங்களை வைத்து தோலைப் போன்ற பொருளைத் தயாரிக்கும் தொழில்நுட்பம் கடந்த சில ஆண்டுகளாக வெளிவரத் தொடங்கியுள்ளது.

பின்லாந்திலுள்ள வி.டி.டி. தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள், காளான் மற்றும் பூஞ்சைகளிலிருந்து தோல் போன்றே ஒரு பொருளைத் தயாரிக்க முடியுமென நிரூபித்துள்ளனர்.

காளான் தோலைத் தொட்டால் நிஜமான விலங்கின் தோலைத் தொடுவது போன்ற உணர்வைத் தருவதுடன், பலவித சாயங்களில் அதைத் தோய்த்து எடுத்து அசத்தவும் முடியும்.

பிரம்மாண்டமான உயிரிக் கலன்களில், பூஞ்சைகள் மற்றும் காளான்களை விஞ்ஞானிகள் நொதிக்க வைக்கின்றனர். இத்தகைய திரவ நொதித்தல் முறையில் காளான்களை பதப்படுத்துவதன் மூலம், பெரியளவில் செயற்கைத் தோல் உற்பத்தியைச் செய்ய முடியும் என்று பின்லாந்து விஞ்ஞானிகள் காட்டியுள்ளனர். இதனால், துணி போன்ற நீண்ட தோல்களை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்ய முடியும். இயற்கையான விலங்குத் தோலைத் துண்டு துண்டாகவே பதப்படுத்தி தயாரிக்க முடியும். அத்துடன், செயற்கையாக தயாரிக்கப்படும் தோலை விரயமாகாமல், பல பொருட்களைத் தயாரிக்க உதவும்.

மேலும், காளான் தோலைத் தயாரிக்க எந்த விலங்கும் கொல்லப்படுவதில்லை. தவிர, நச்சுள்ள வேதிப்பொருட்களைக் கொண்டு பதப்படுத்தும் தேவையில்லை. இதனால், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பிருக்காது.

காய், கனிகளின் ஆயுளை அதிகரிக்கும் பூச்சு

சத்துகளைத் தாங்கி வரும் காய்கறிகள் மற்றும் பழங்கள் என்பன அலுமாரியில் அதிக நாட்கள் இருக்க என்ன செய்யலாம்? இது விஞ்ஞானிகளுக்கு ஒரு முக்கியமான சவால்தான். இச்சவாலை, புரோசேன் என்ற ஒரு உயிரிப்பொருள் சமாளிக்க உதவும்.

பிரான்ஸைச் சேர்ந்த புரோடெமி என்ற நிறுவனம், புரோசேன் என்ற 100 சதவீத இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு பூச்சுப் பொருளை உருவாக்கியுள்ளது. இந்தப் பொருளை காய்கறிகள் மற்றும் பழங்கள் மீது போட்டுப் புரட்டினால், மெல்லிய புரோசேன் படலம் அவற்றின்மீது உருவாகின்றது.

இந்தப் பூச்சு, காய்கனிகளின் இயற்கையான ஈரப்பதம், ருசி மற்றும் மணம் ஆகியவற்றை வெகுநாட்கள் பொத்திக் காக்கிறது. இதனால், விளைபொருட்கள், அங்காடி அலமாரியில் சில வாரங்கள் கூடுதலாக கெடாமல் பத்திரமாக இருக்கும்.

புரோசேன் படலத்தை நுகர்வோர் விரும்பினால் கழுவி அகற்றலாம். அல்லது அப்படியே சாப்பிடலாம். இதனால் எந்தவித ஒவ்வாமையும், நச்சுத்தன்மையும் உடலுக்கு ஏற்படாதென புரோடெமி நிறுவனம் தெரிவித்துள்ளது. புரோசேனில் அடங்கியுள்ள உயிரி பொலிமர் உட்பட அனைத்து பொருட்களும் எளிதில் மக்கிவிடும் தன்மை கொண்டவை. அதுமட்டுமல்ல, புரோசேனை தயாரிக்கும் ஆலையும் சுற்றுச்சூழலுக்கு துளியும் கேடு விளைவிக்காது என்பதுதான் ஆச்சரியம். இயற்கை காய்கறிகளுக்காகத் தேடி அலைபவர்களுக்கு புரோசேன் நிச்சயம் பிடிக்கும்.

நூற்றாண்டு விழா கொண்டாட தயாராகும் மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலை

(எம்.எஸ்.அமீர் ஹுசைன்)

மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலை இவ்வருடம் 2021ஆம் ஆண்டு அதன் 100 வருட நிறைவை குறிக்கும் நூற்றாண்டு விழாவை கொண்டாட தயாராகி வருகின்றது. அதற்கான பல நடவடிக்கைகளை எடுத்திருப் பதாக கல்லூரி அதிபர் ஆதம்பாவா முஹம்மது நௌஷாத் தெரிவிக்கின்றார்.

அண்மையில் இப்பாடசாலைக்கு புதிய அதிபராக நியமணம் பெற்று வந்துள்ள அவர் கல்லூரியின் நூற்றாண்டு விழா ஏற்பாடுகள் மற்றும் இன்றைய கற்றல் கற்பித்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே இதனைத் தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் மாத்திரமன்றி இலங்கை தேசம் முழுவதிலும் புகழ் மனம் பரப்பிக்கொண்டிருக்கும் மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் முன்னோக்கிய நகர்வுகள் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது : -

வாழ்க்கை என்பது ஒரு சவாலாகும். நாம் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிகொள்ள வேண்டும். இன்றைய நிலையில்

உலகமே ஓர் அசாதாரண சூழ்நிலையை எதிர்கொண்டிருக்கின்றது. கற்பித்தல், கற்றல் முறைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தும் ஒரு யுகத்தில் நாம் பிரவேசித்துள்ளோம். இந்த டிஜிட்டல் கற்றல், கற்பித்தல் முறையில் நாம் மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற வகையில் சவால்களை சந்தித்து வருகின்றோம்.

அதனால் இந்த டிஜிட்டல் சவாலை வெற்றி கொள்ளக்கூடிய சமுதாயத்தை உருவாக்க வேண்டிய ஒரு தேவை எமது மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு இருக்கின்றது. ஏனெனில், இப்படியான சவால்கள்மிக்க நிலையிலும் பரீட்சைகள் நடந்தேறும். நாம் பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும். இந்த பாடசாலை நூற்றாண்டு விழாவை கொண்டாடுகின்ற நிலையில், இந்தச் சவாலும் எம்மை சந்தித்திருக்கின்றது. இந்நிலையில் முன்னோக்கி இருக்கின்ற சவால்களை நாம் வெற்றிகொள்ள வீட்டில் பாதுகாப்பாக இருக்கவேண்டும். மாணவர்கள் வீட்டில் இருந்தே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியிருப்பதால் அதற்கான வழிகாட்டல்களை பெற்றோர்களும் சகோதர சகோதரிகளும் வழங்கவேண்டும். அத்துடன், சிறந்த கற்பித்தல் சூழ்நிலைகளையும் வீட்டில் உறுதிசெய்ய வேண்டும்.

ஸாஹிரா தேசிய பாடசாலை அகில இலங்கை ரீதியில் பேசப்படுகின்ற பாடசாலையாக மாறுவதற்கு இந்த சவால்களை நாம் நல்ல முறையில் எதிர்கொண்டு வெற்றிகொள்ள வேண்டும். இருளில்தான் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன. இந்த இருளான இன்றைய காலகட்டத்தில் எமது மாணவர்களை பிரகாசிக்கின்ற நட்சத்திரங்களாக மாற்றிக்கொள்ள கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்தக் கல்லூரியை மேலும் வெற்றிநடை போடச் செய்ய பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம், கல்லூரிக்காக பலவிதத்திலும் வெளியிலிருந்து ஒத்துழைப்பு வழங்கக்கூடிய அனைவரும் இணைந்ததாக இந்தச் சந்தர்ப்பத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பல திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர். அதனால் இந்தப் பாடசாலையின் வெற்றி நீரோட்டத்தில் நீங்கள் அனைவரும் இணைவீர்கள் என்று நான் கருதுகின்றேன். அதற்காக எல்லாத் தரப்பினரும் கைகோர்க்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரி 1920ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாவனல்லை ஹிங்குள்ஓயா மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல் வளாகத்தில் ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலையாகும். மன்னாரைச் சேர்ந்த சாமுவேல் என்பவரை ஆசிரியராகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, 1921ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் அரசாங்க பாடசாலையாக பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. அன்றுமுதல் இன்றுவரையிலான 100 வருட காலப்பகுதிக்குள் இக்கல்லூரி பல்வேறு கட்டங்களில் வளர்ச்சிகளையும் முன்னேற்றங் களையும் அடைந்து வந்திருக்கின்றது.

இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது மாணவராக புகழ்பெற்ற முறிவு வைத்தியராக இருந்த ஏ.ரி.எம்.ஏ.அஸீஸ் என்பவர் பதிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், நூற்றாண்டு விழா நடவடிக்கைகளை முன்னெடுக்கவென பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பழைய மாணவர் சங்கம், பழைய மாணவியர் சங்கம் உட்பட பலதரப்பட்டவர்களையும் இணைத்ததாக ஒரு நடவடிக்கைக் குழு கடந்த மார்ச் மாதமளவில் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

கவிஞர் பி.ஆர்.பெரியசாமி நூல் வெளியீட்டு விழா

மலையகத்தின் புரட்சிப்பாவலன் பி.ஆர். பெரியசாமி அமரராகி ஐம்பத்தைந்து ஆண்டுகளாகிவிட்டன. சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் யட்டியாந்தோட்டையில் நடந்த்ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கூட்டமொன்றில் அமரர் அ. அசீஸ், கே.ஜீ.நாயர் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

அவை எனக்கு இப்போது ஞாபகம் இல்லாவிட்டால் கூட. கவிஞர் பெரியசாமி வீராவேசத்தோடு மேடையில் ஏறி, “ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சிங்கம். அதில் நமது தலைவர் அசீஸ் வீரசிங்கம்” என்று பாடியது இன்றும் எனது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.

கவிஞர் பெரியசாமியால் 64 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட “தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம்” என்ற நூல் இப்பொழுது மீண்டும் மறு பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த்அரிய வரலாற்றுப் போராட்ட ஆவணத்தைத் தேடி எச்.எச்.விக்கிரமசிங்க மறுபிரசுரம் செய்திருக்கிறார்.

அவர் மறைந்து இன்றுடன் 55 ஆண்டுகள் நிறைவுபெற்ற இந்நாளில் சமகாலத்தில் அவருடன் பழகியவன், அவரது எழுத்துகளைத் தேடித்தேடி வாசித்தவன் என்ற வகையில் இந்நூலை வெளியிட்டுவைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்று சண்முகாஸ் உணவகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வீரப்போராட்ட நூலை வெளியிட்டு வைத்து பேசிய முன்னாள் அமைச்சர் பி.பி.தேவராஜ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் யதார்த்தபூர்வமான அன்றைய நிலைமைபற்றி 1957 இல் வெளிவந்த்அவரது நூலில் இவ்வாறு கூறுகின்றார்:

“அக்கிரமத்தின் உச்சி, ஆணவத்தின் தலைமை, அதிகாரத்தின் குரூரம், ஏகாதிபத்தியத்தின் இறுமாப்பு, முதலாளித்துவத்தின் முரட்டு சுபாவம், நிறத்திமிரின் நிட்டூரம் அனைத்தும் கோரத் தாண்டவமாடும் உள்ளம் படைத்த வெள்ளையர்கள் துரை என்ற பெயரில் நடமாடியவேளை, பிரித்தானிய சாம்ராஜ்யத்திலே சூரியன் என்றுமே அஸ்தமிக்காது என்று கனவுகண்டு இறுமாப்படைந்திருந்த ஏகாதிபத்திய கர்வத்தில் மூழ்கியிருந்த காலகட்டத்தில்தான் கவிஞர் பெரியசாமியின் நூல் வெளிவந்தது.

ஆனால், இயல்பாகவே மனிதரிடம் குடிகொண்டிருந்த விடுதலை வேட்கை, மனிதனின் மாண்பை உள்ளார உணர்ந்து கொள்வதில் இருந்த வீரியம், இனி படமாட்டோம் என்று வீறுகொண்டெழுந்த மானுடம், ஏகாதிபத்தியத்தின் இறுமாப்புக் கனவுகளை ஆழ்கடலிலே மறையச் செய்துவிட்டது.

இன்றும் பல பிரச்சினைகள் இருந்தாலும் மனிதத்துவம் மேலோங்கியுள்ளது. அன்று அடிமைப்பட்டிருந்த நாட்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது மலையகத்தில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. தோட்டத் தொழிலாளர் மத்தியிலிருந்து கற்போர் தொகையும் கல்விமான்களும், தொழில்துறை வல்லுநர்களும் பலர் தோன்றியுள்ளனர். அந்தக் காலம் வேறு, இந்தக் காலம் வேறு.

ஆனால், தோட்டத் தொழிலாளர் அன்று பல பேரின் உயிர்களைப் பறிகொடுத்து, பச்ச இரத்தத்தைப் பரிமாறி, தூக்குமேடை ஏறி, மண்டை உடைப்பட்டு, நிகழ்த்திய தியாகத்தின் மேல் தியாகம் செய்து நடத்திய போராட்டங்களின் மூலம்தான் இந்த்மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது மறுக்கமுடியாது.

கவிஞர் பி.ஆர்.பெரியசாமி, தொழிலாளர்கள் வடிக்கும் இரத்தக் கண்ணீரைக் கண்டு உள்ளம் குமுறி வடித்த நூல்தான் “தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம்” என்கின்ற இந்த வெளியீடாகும். இவ்வளவுகாலம் கடந்தாவது இந்த நூலை அமரர் பெரியசாமி குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் அற்புதமாக செய்து முடித்திருக்கின்றார். பிரபல இலக்கியவாதியும் ஆய்வாளருமான நண்பர் எச்.எச்.’விக்கிரமசிங்க ஆற்றிய பங்கு அளப்பரியதாகும்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் பேசுகையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு காரணங்களுக்காக தமது தோட்ட உரிமையாளருக்கு எதிராக வெகுண்டெழுந்த போராட்ட வரலாறு சரியாக ஆவணப்படுத்தப்படவில்லை என்ற முறைப்பாடு உண்டு. நடேசய்யரோடு ஒன்றிணைந்து தொழிற்சங்கப் போராட்டங்களில் நேரடியாக பங்குபற்றி 1957ஆம் ஆண்டு இந்த போராட்ட வரலாற்றை ஆவனப்படுத்தி வரலாற்றுச் சாதனை படைத்தவர் கவிஞர் பி.ஆர்.பெரியசாமி.

அதனைத் தேடி மீண்டு மீள்பிரசுரம் செய்த எச்.எச்.விக்கிரமசிங்கவுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த லண்டனில் வாழும் பெரியசாமியின் புதல்வன் சிவஞானத்திற்கும் புதல்வி இரத்னேஸ்வரி பெரியசாமிக்கும் எனது பாராட்டுகள்.

அந்நூலின் அருமை, பெருமைகளை நன்குணர்ந்த மூத்த பத்திரிகையாளர் எச்.எச்.விக்கிரமசிங்க முழுமூச்சுடன் பணியில் இறங்கி 2ஆம் பதிப்பை வெளிகொண்டுவந்தது சிறந்த பணியாகும்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்தை ஜோசப் பேசுகையில்,

பெரியசாமியின் வீரம் ததும்பிய மேடை பாடல்களை நினைவுபடுத்தினார். தொழிலாளர்கள் போராட்டங்களில் தோளோடு தோள் நின்று அவர்களுக்கு ஊக்கம் வழங்கி தமது உரிமைகளை வெல்வதற்கு பெரியசாமி ஆற்றிய பலவற்றை அவர் நினைவுகூர்ந்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் வீரப்போராட்டம் என்ற இந்நூல் சிறிதானாலும் அது எழுப்பிவிடும் மலையக போராட்டம் நினைவலைகள் கடல் போன்றது -என்றார்.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஊடாக மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சபையில் தெரிவிப்பு

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை உறுதியாக தோற்கடிக்கப்படும் என்பதுடன், புதிய நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் ஊடாக நாட்டு மக்களுக்கு பல்வேறு சலுகைகள் 2022ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 11 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராகவே கொண்டு வரப்பட்டிருந்தது. ஆனால், அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன நடந்ததென தெரியாது. இவ்வாறுதான் அனைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளாது நழுவச் செய்தனர்.

நாம் கொண்டுவந்திருந்த இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை ஒழுக்கப் பத்திரத்தில் கூட சேர்த்திருக்கவில்லை. இவர்கள்தான் ஜனநாயகம் பற்றி பேசுகின்றனர். ஆனால், நாம் ஜனநாயகத்தை எவ்வாறு வழங்கியுள்ளோம் என்பதற்கு சிறந்த உதாரணமே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும்.

ஜூலை 22ஆம் திகதி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. 28 நாட்களுக்குள் அதனை விவாதத்திற்கு எடுத்து எதிர்நோக்க ஓர் அரசாங்கமாக எமக்கு வலுவுள்ளதென்பதை நிரூபித்துள்ளோம்.

நாம் அச்சத்தால் ஒளியும் அரசாங்கம் அல்ல. அன்று நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டால் அரசாங்கம் அச்சத்தில் நடுங்கும். அரசாங்கம் பகுதி பகுதியாக துண்டாடப் படுமென அஞ்சி அவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்போம் என்பதை எதிர்க்கட்சியினருக்கு தெரிவிப்பதுடன், புதிய நிதி அமைச்சராக பெசில் ராஜபக்ஷ பணிகளை ஆரம்பித்துள்ளார். 2022ஆம் ஆண்டில் மக்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்க நடவடிக்கையெடுப்போம் - என்றார்.

எம்.பிக்களின் சிறப்புரிமை பற்றி பேச ரணிலுக்கு அருகதை கிடையாது!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் கருத்து

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த பல சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பை முழுமையாக மீறியே செயற்பட்டுள்ளார். அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் பற்றி பேசுவதற்கு அவருக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாதென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை பங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் முன்னாள் பிரதமரும் ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் பதிலளிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவிருந்த காலப்பகுதியில் எவ்.சி.ஐ.டியை உருவாக்கி அரசியலமைப்பை மீறியிருந்தார். ஊழல் ஒழிப்புப் பிரிவை உருவாக்கிய சந்தர்ப்பத்திலும் அவர் அரசியலமைப்பை மீறியிருந்தார். ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை பற்றி பேசுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை.

ரிஷாட் பதியுதீன் ஒரு எம்.பியாக இருந்தமையால் அல்ல அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவர் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுடன் பல்வேறு தொடர்புகளைக்கொண்டிருந்த குற்றச்சாட்டுகளின் பிரகாரமே கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரது விவகாரம் தற்போது சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஹரின் பெர்னாண்டோ எம்.பியை கைது செய்வதற்கு எவ்வித தயார்படுத்தல்களும் இருக்கவில்லை. ஆனால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை தெரியுமென அவர் கூறியிருந்தார். பிரதான சூத்திரதாரி யாரென தெரியுமாக இருந்தால் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அந்த தகவல்களை வழங்குவது அவரது கடமையாகும் - என்றார்.

‘‘எரிபொருள் விலையை உயர்த்திய கம்மன்பிலவை வெளியேற்றுவோம். நிவாரணத்தைக் குறைத்து நாட்டை அழிக்கும் ஒடுக்குமுறை அரசாங்கத்தை விரட்டுவோம்’’ எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடுசெய்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை நாடாளுமன்ற சுற்றுவட்ட வளாகத்தில் நடைபெற்றது. இந்தப் போராட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமைதாங்கியதோடு, ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட ஏராளமான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். தன்னிச்சையாக அதிகரித்த எரிபொருள் விலையை அரசாங்கம் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று கலந்துகொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஏகமனதாக கோரினர். (படப்பிடிப்பு: எஷான் தஸநாயக்க)

இரு மகள்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய தந்தை பொலிஸில் சரண்

14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

(எம். செல்வராஜா)

பதுளையில் 13 மற்றும் 15 வயதுகளையுடைய இரு சிறுமிகள் கர்ப்பம் தரிக்க காரணமாக இருந்து, தலைமறைவாகியிருந்த அச்சிறுமிகளின் தந்தை பேராதனை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை சரணடைந்தார். சரணடைந்த அந்நபரை, பேராதனை பொலிஸார், எல்ல பொலிஸ் நிலையத்திற்கு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பதுளை பகுதியின் தெமோதரை மேற்குறிப்பிட்ட 13 மற்றும் 15 வயதுகளையுடைய இரு சிறுமிகள் உள்ளிட்ட தாயும் தந்தையும் கொண்ட நான்கு பேருள்ள குடும்பத்தில், குறிப்பிட்ட இரு சிறுமிகளுக்கு வயிற்றுவலி ஏற்பட்டதன் காரணமாக, தாய் அச்சிறுமிகளை பதுளை அரசினர் மருத்துவமனைக்கு நேற்று கூட்டிச்சென்றுள்ளார். சிறுமிகளை பரிசோதனை செய்த டாக்டர்கள் சிறுமிகள் இருவரும் கர்ப்பம் தரித்திருப்பதை உறுதிப்படுத்தினார்கள்.

இது குறித்த தீவிர புலன் விசாரணைகளை எல்ல பொலிஸாரும், எல்ல பொலிஸ் நிலைய மகளிர் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து, அச்சிறுமிகளின் தந்தையே, கர்ப்பம் தரிக்க காரணமென்று உறுதியாகத் தெரியவந்துள்ளது. அத்துடன், பொலிஸார் அந்நபரை கைதுசெய்ய சென்ற வேளையில், அந்நபர் பிரதேசத்தை விட்டு தலைமறைவாகியிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அந்நபர் பேராதனைக்கு தப்பிச்சென்றிருந்த வேளையில், அப்பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் எல்ல பொலிஸாரினால் விசாரணை செய்யப்படுவதால் , சரணடைந்த நபர் கைதுசெய்யப்பட்டு, எல்ல பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

எல்ல பொலிஸாரும், எல்ல பொலிஸ் நிலைய மகளிர் பிரிவினரும் குறிப்பிட்ட நபரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். விசாரணைகள் நிறைவுற்றதும் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் 36 வயதுடைய தந்தையை நேற்று பதுளை மஜிஸ்ரேட் நீதிபதி சமிந்த கருணாதாச முன்னிலையில் ஆஜர்செய்தபோது, நீதிபதி அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

பொகவந்தலாவை பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல தோட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 6.40 மணியளவில் பொகவந்தலாவை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 45 மற்றும் 46 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை இன்றையதினம் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து இருவரையும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கல்வித்துறையிலுள்ள சிக்கலை தீர்க்குமாறு கண்டியில் ஆர்ப்பாட்டம்

(மொஹொமட் ஆஸிக்)

கல்வித்துறையில் நிலவுகின்ற பல சிக்கல்களை உடன் நீக்குமாறு கோரி கண்டி ஜோர்ஜ் ஈ. டி சில்வா பூங்காவிற்கு அறுகில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பாரியளவில் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, சுமார் 24 வருடங்களாக நிலவிவருகின்ற ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டை உடன் தீர்க்குமாறும், கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தை அகற்றிக்கொள்ளுமாரும், ஒன்லைன் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வசதிகளை செய்துகொடுக்குமாறும் கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜோர்ஜ் ஈ. டி சில்வா பூங்காவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் பேராதனை வழியாகச் சென்று கண்டி மத்திய சந்தைக்கு அருகில் வந்து ஆர்ப்பாட்டத்தில் மீண்டும் ஈடுபட்டனர்.

அக்குறணை பிரதேசத்தில் 37,516 பேருக்கு தடுப்பூசி

(மொஹொமட் ஆஸிக்)

கண்டி மாவட்டத்திற்கு கொவிட்-19 வைரஸ் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின்கீழ் அக்குறணை பிரதேச செயலகப் பிரிவுக்காக மொடர்னா தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அக்குறணை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நீரெல்லை ஆரம்ப பாடசாலையில் நேற்று அக்குறணை பிரதேசத்திற்கான தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த ஆரம்ப நிகழ்வுக்கு அக்குறணை பிரதேச சபையின் தலைவர் இஸ்திஹார் இமாதுதீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

அக்குறணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 35 கிராம அதிகாரிகள் பிரிவில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இத்தடுப்பூசி வழங்கவுள்ளதாகவும் அதன்படி அக்குற்றணையில் 37,716 பேருக்கு தடுப்பூசி வழங்கவுள்ளதாகவும் அதற்காக ஏழு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

தலவாக்கலையில் 30 வயதிற்கு மேற்பட்டோருக்கு முதற்கட்ட தடுப்பூசி

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட தலவாக்கலை பகுதியிலுள்ள 30வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதற்கட்ட கொரோனா சினோபார்ம் தடுப்பூசி நேற்று ஏற்றப்பட்டதாக கொட்டகலை பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலவாக்கலை தேசிய பாடசாலையில் இடம்பெற்ற தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் 30 வயதிற்கும் மேற்பட்ட தலவாக் கலை நகரவாசிகள், தலவாக்கலை நகரை அண்மித்த தோட்டங்கள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்த தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குமான இரண்டாம் கட்ட தடுப்பூசியாக 2 ஆயிரம் பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

நாவலப்பிட்டியில் கைவிடப்பட்ட அபிவிருத்திகள் விரைவில் ஆரம்பம்

நகர சபையின் புதிய தலைவர் தெரிவிப்பு

(எம்.கிருஸ்ணா)

நாவலப்பிட்டி நகர சபையின் புதிய தலைவர் டி.பி.அமல் பிரியங்க நேற்று உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அதிகாரத்திலிருந்த நாவலப்பிட்டி நகர சபையின் முன்னாள் தலைவர் சசங்க சம்பத் அப்பதவியிலிருந்து விலகுவதாக மத்திய மாகாண ஆளுநரினால் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த வெற்றிடத்திற்கு தலைவர் ஒருவரை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பு கடந்த 15ஆம் திகதி மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஹேரத் தலைமையில் இடம் பெற்றதையடுத்து 5இற்கும் 7 என்று மேலதிக வாக்குகளால் பொதுஜன பெரமுன உறுப்பினர் அமல் பிரியங்க தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

இதனையடுத்து நேற்றுக் காலை 11 மணியளவில் சுபநேரத்தில் கடமைகளை சமய வழிபாடுகளுடன் நாவலப்பிட்டி நகரசபையின் தலைவராக அமல் பிரியங்க கடமைகளை பொறுப்பேற்கொண்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், உடனடியாக நாவப்பிட்டி நகர சபை அதிகாரப் பகுதியில் தடைப்பட்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்த யுவதியை தேடும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்



(க.கிஷாந்தன்)

டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்து காணாமற் போயுள்ள 19 வயது யுவதியை தேடும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக திம்புளை – பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தனை டெவோன் நீர்வீழ்ச்சியை தனது மூன்று நண்பிகளுடன் பார்வையிடச் சென்ற போது நேற்று முன்தினம் மாலை குறித்த யுவதி நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து கால் தடுமாறி விழுந்து காணாமற்போனார்.

இந்நிலையில் இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மீட்புப் பணிகள் நேற்றுக் காலைமுதல் இடம்பெற்று வந்த நிலையில், மீட்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக திம்புளை – பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நீர்வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்து காணாமல்போயுள்ள யுவதி லிந்துலை லென்தோமஸ் பகுதியில் வசித்த 19 வயதான மணி பவித்ரா என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதியில் பாரிய கற்பாறைகள் உள்ளதாலும், நீர்வீழ்ச்சியில் அதிகளவில் நீர் விழுவதனை கருத்திற்கொண்டு மேற்படி யுவதியை தேடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பதுளையில் 2 இலட்சம் பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன

(த.அசோக்குமார்)

பதுளை மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நூறு சதவீதம் தடுப்பூசி ஏற்றப்பட்டு, 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது, பதுளை மாவட்டத்தில் கொவிட்-19 தொற்று நோய்க்கான தடுப்பூசி செயல்முறை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இதுவரை பெறப்பட்ட 2 இலட்சத்து 50 ஆயிரம் சினோர்பார்ம் தடுப்பூசிகளில் சுமார் ஒரு இலட்சத்து 80ஆயிரம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளன - என ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்திலிருந்து ஒவ்வொரு நாளும் சுமார் 150 கொவிட் நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும், பதுளை மாவட்டம் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம், பொது, தனியார்துறை மற்றும் சுகாதாரத்துறை மற்றும் மாவட்டத்தின் அனைத்து அரசியல் அதிகாரிகளின் ஆதரவும் மிக உயர்ந்த மட்டத்தில் பெறப்பட்டு வருவதாகவும், தடுப்பூசி எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதாரத் திணைக்களம் கூறுகிறது.

பசறை அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சிவக்குமாருக்கு அவரது சமூக சேவையைப் பாராட்டி ஜனஹிதகாமி கீர்த்தி ஸ்ரீ தேசபந்து லங்கா புத்ர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (நடராஜா மலர்வேந்தன்)

நிலையான மீளெழுச்சிக்கான WLPGA யின் தொனிப்பொருளை வலியுறுத்தும் வகையில் உலக திரவ பெற்றோலிய வாயு தினம் 2021ஐ கொண்டாடும் லிட்ரோ கேஸ் லங்கா

உலகமானது கொவிட்-19 தொற்றுநோயினால் ஏற்பட்ட பேரழிவுத் தாக்கத்திலிருந்து மீட்சி பெறுவதை எதிர்நோக்கும் நிலையில், தூய்மை, பசுமை மற்றும் திறன் வாய்ந்த சக்திக்கான திரவ பெற்றோலிய வாயுவின் [LPG] பங்கானது, பொருளாதாரம் மற்றும் சமூக மீள் எழுச்சி முயற்சிகளுக்கு முக்கியத்துவம் மிகுந்ததாக மாறியுள்ளதாக, இம்மாதம் கொண்டாடப்படும் உலக திரவ பெற்றோலிய வாயு தினத்தை முன்னிட்டு, உலக திரவ பெற்றோலிய வாயு சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு உலக பெற்றோலிய வாயு தினமானது தொற்றுநோயில் இருந்து நிலையான மீட்சி பெறுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், திரவ பெற்றோலிய வாயுவினூடாக சமூகங்களை பலப்படுத்தும் பொதுவான நோக்கம், தொனிப்பொருளாக அதன் அங்கத்தவர்கள் மற்றும் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உலக திரவ பெற்றோலிய வாயு சங்கத்தின் நோக்கத்தை செயற்படுத்தும் இலங்கையின் தேசிய திரவ பெற்றோலிய வாயு வழங்குநரான லிட்ரோ கேஸ் லங்கா திரவ பெற்றோலிய வாயுவில் 150 வருட பெருமை மிகு ஐதீகத்தைக் கொண்டுள்ளதுடன், திரவ பெற்றோலிய வாயுவின் வளர்ச்சியானது இன்றைய நிலைக்கு மாறுவதற்கான பாதையை வகுத்துள்ளதால் தூய்மையான, பசுமையான சக்தியானது வீட்டுத் தேவைகளுக்காகவும் வர்த்தக கோரிக்கைகளுக்காகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படுகிறது.

உலக திரவ பெற்றோலிய வாயு அமைப்பின் [WLPGA]அங்கத்தவர் என்ற நிலையில் லிட்ரோ கேஸ் லங்காவானது எரிசக்தி துறையின் பல அம்சங்களில் நிலையான மீள் எழுச்சிக்கான நோக்கத்தை நிலைநிறுத்துவதில். WLPGA உடன் முழுமையாக இணைந்து செயற்படுவதில் உறுதியாக உள்ளது. என லிட்ரோ கேஸ் லங்கா மற்றும் லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா ஆகியவற்றின் தலைவரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான அனில் கொஸ்வத்த தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக திரவ பெற்றோலிய வாயுவானது நாட்டில் உறுதியாக வேரூன்றியுள்ள நிலையில் லிட்ரோ கேஸ் லங்காவானது திரவ பெற்றோலிய வாயுவின் நோக்கத்தை ஒரு தூய்மையான மற்றும் திறன் மிகுந்த சக்தியாக விரிவுபடுத்தியுள்ளதுடன், இது பல பயன்பாடுகளை ஊக்குவிக்கும் அதே வேளையில் புதிய மற்றும் அதிநவீன பயன்பாட்டுப் பகுதிகளுடன் முன்னேற்றத்தை உருவாக்குகிறது.

நிறுவனமானது புத்தாக்கமான மற்றும் ஆய்வினை அடிப்படையாகக்கொண்ட செயற்பாடுகளை விநியோகிப்பதில் மாறாத கவனத்தை செலுத்தி வருவதுடன், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுடன் பாரிய தொழில்துறைகளும் திரவ பெற்றோலிய வாயுவினை மலிவான, தூய்மையான மற்றும் திறன் மிகுந்த எரிபொருளாக தெரிவுசெய்வதற்கு ஊக்குவிப்பதை குறிப்பாக வலியுறுத்துகிறது.

இலங்கையில் திரவ பெற்றோலிய வாயுவின் பயன்பாடானது, தற்போது சுமார் 35% ஆக உள்ளதுடன், இங்கு பல சமூகங்கள் இன்னும் உள்ளக மாசினை உருவாக்கும் விறகு போன்ற சக்தி மூலங்களில் தங்கியுள்ளனர்.எனவே, அவர்களை திரவ பெற்றோலிய வாயுவினை தூய்மையான, பசுமை சக்தி வடிவமாக பயன்படுத்துவதை ஊக்குவிப்பது எமது பிரதான முயற்சிகளில் ஒன்றாக உள்ளது.

முதல் முடக்குதல் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே விலைகளைத் தக்கவைத்துக் கொண்டதன் மூலம் நுகர்வோருக்கு கணிசமான பொருளாதார நன்மை வழங்கப்படுவதை உறுதி செய்ததிலிருந்து, நிறுவனம் மாறி வரும் வாடிக்கையாளர்களின் விருப்புக்கேற்ப பெறுமதியைச் சேர்த்து, தனது தயாரிப்புகளின் தொகுதிகளை விரிவுபடுத்தியுள்ளது.

லிட்ரோ கேஸ் லங்காவானது முழு உலகுக்கும் உலகளாவிய பங்காளர்கள் ஊடாக தூய்மையான சமையல் சக்தியை உறுதி செய்யும், தூய்மையான சமையல் கூட்டணியின் அங்கத்தவராக உள்ளது.

நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பயன்பாடுகளை தொடரும் முகமாக நிறுவனமானது அண்மையில் குழாய் மூலமான திரவ பெற்றோலிய வாயு முறைமையை அறிமுகப்படுத்தியது. இது சிலிண்டர் அடிப்படையிலான திரவ பெற்றோலிய வாயுவில் இருந்து கேள்விக்கேற்ற அமைப்புக்கு மாறுவதை ஊக்குவிக்கிறது. இந்த முறைமையானது தொழில்துறைக்கு ஒரு புதிய தரத்தை வழங்குவதுடன் இதனால் வாடிக்கையாளர்கள் தமது திரவ பெற்றோலிய வாயு தெரிவுகளை தேர்ந்தெடுப்பதில் அதிகநலன்கள் கிடைக்கும்.

திரவ பெற்றோலிய வாயுத்துறையில் 76% சந்தைப்பங்கு மற்றும் 45 பில்லியன் வருவாயுடன் லிட்ரோ கேஸானது 14,000க்கும் மேற்பட்ட விற்பனையிடங்கள், 1,500 வீட்டு விநியோக மையங்கள் மற்றும் 42 விநியோகஸ்தர்கள் வலையமைப்பு, ஆகியவற்றின் மூலம் இயங்குகிறது. நிறுவனமானது தமது லிட்ரோ கேஸ் வீட்டு விநியோக மொபைல் செயலி மற்றும் 1311 வாடிக்கையாளர் நல ஹொட்லைன் மூலம் உறுதியான சந்தை முன்னிலையைப் பேணி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

"நோயெதிர்ப்பு சக்தியைப் பெருக்கும் கருஞ்சீரக எண்ணெய்"

ஆயுர்வேத வைத்தியர் ஆர்.யூ.திசேரா

கொவிட்-19 வைரஸ் 3 ஆம் அலையானது நடுத்தர மற்றும் இளம் வயதினரை அதிகம் பாதிப்பதோடு, தினந்தோறும் தொற்றுக்குள்ளானோர் தொகை மற்றும் மரண எண்ணிக்கை ஆகியவற்றைப் பெருக்கி வருகிறது. வைரஸின் விரைவான பரவலுடன், மனித சுவாசத் தொகுதிக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் விதமாக வெவ்வேறு வகைகள் காணப்படுகின்றன. மேலும் கொரோனா வைரஸிலிருந்து திரிபுபடுத்தப்பட்ட வெவ்வேறு வைரஸ்களும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த சவால் மிகுந்த காலங்களில், கொடிய நோயை எதிர்கொள்ள உங்களின் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கப்பட வேண்டும். கொவிட்-19 க்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றமை வைரஸுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, ஆயுர்வேத மூலிகை மருந்துகளின் நுகர்வு பொது மக்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. ஆயுர்வேத மருத்துவத்தின் பங்களிப்பு இன்று முக்கிய கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் பெருவாரியாகப் பேசப்படும் மருந்தாகக் கருஞ்சீரக எண்ணெய்யைக் குறிப்பிடலாம். தற்போது இருக்கும் விஞ்ஞான ஆய்வுகள் பலவற்றின் மூலம், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சக்தி கருஞ்சீரகத்தில் அதிகளவில் உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

3000 வருடங்கள் பழைமை வாய்ந்த கருஞ்சீரகம், தற்போது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு ஆயுர்வேத மற்றும் யுனானி வைத்திய முறைகளில், பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தனித்துவமான மருத்துவ குணங்கள் காரணமாக, ஆஸ்துமா, இருமல் மற்றும் சளி போன்ற சுவாசத் தொகுதி சார்ந்த நோய்கள் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல நோய்களுக்கான சிகிச்சையாகவும் கருஞ்சீரகம் பயன்படுத்தப்படுகிறது. கருஞ்சீரகத்தில் அடங்கியிருக்கும் தைமோகுயினோன் (Thymoquinone) எனும் பிரதான கூறானது, உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது என்பதை உலகின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் பலவும் நடத்திய ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தைமோகுயினோன் மூலம் குருதியிலுள்ள வெண்குருதிச் சிறு துணிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் செயற்பாடு அதிகரிப்பதுடன் உடலுக்குள் புகும் விஷக் கிருமிகளையும் அழிக்கிறது. இதனால் உங்களைக் கொடிய வைரஸ்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியமான வாழ்க்கையைத் தரக் கூடியதாக இந்த கருஞ்சீரக எண்ணெய் இருக்கிறது. கருஞ்சீரக எண்ணெய் ஒரு தேக்கரண்டி அல்லது அரைத் தேக்கரண்டியை சிறிதளவு தேனுடன் கலந்து, காலை உணவுக்குப் பின் தினந்தோறும் அருந்தி வந்தால், உங்களாலும் அனைத்து விதமான நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற்று நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உரிமை கோர முடியும்.

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 05 06 27 73
திகதி: 19.07.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0540

	கட்டமைப்பு	பரிசுகள்		வெற்றியாளர்கள் எண்ணிக்கை
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	1,000,000.00	0
2 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	100,000.00	2
3 ஆம் பரிசு	3 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	3,000.00	80
4 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	1,000.00	177
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	100.00	4399
6 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின்	ரூ.	60.00	2873
7 ஆம் பரிசு	1 இலக்கம் சரியாயின்	ரூ.	20.00	72839
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின்	ரூ.	20.00	13655

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,959,160.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 94,025

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 99,635,830.00

• ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
• பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
• சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ஜாதிக லொதரஸ் போர்ட்
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம்: 2805 சீட்டிழுப்பு திகதி: 19.07.2021
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 06 11 19 75

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுத் தொகை ரூ.	வெற்றி பெற்றோர்
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000,000.00	1
2 ஆம் பரிசு	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000.00	7
3 ஆம் பரிசு	இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	2,000.00	133
4 ஆம் பரிசு	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	1,000.00	331
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	100.00	8770
6 ஆம் பரிசு	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	40.00	5638
7 ஆம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	20.00	142063
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	20.00	26099

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 183,042

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 6,762,760.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 79,549,881.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஜாதிக லொதரஸ் போர்ட்
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம்: 4510
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
திகதி: 19.07.2021
வெற்றி எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 2 4 6 4 7 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

				வெற்றியாளர் எண்ணிக்கை
1ஆம்பரிசு	2 4 6 4 7 0	ரூபா.	2,000,000/-	1
2ஆம் பரிசு	4 6 4 7 0	ரூபா.	100,000/-	9
3ஆம் பரிசு	6 4 7 0	ரூபா.	10,000/-	96
4 ஆம் பரிசு	4 7 0	ரூபா.	1,000/-	983
5ஆம் பரிசு	7 0	ரூபா.	100/-	9863
6ஆம் பரிசு	0	ரூபா.	20/-	97563

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

				வெற்றியாளர் எண்ணிக்கை
7ஆம் பரிசு	2 4 6 4 7	ரூபா.	10,000/-	12
8ஆம் பரிசு	2 4 6 4	ரூபா.	1,000/-	100
9ஆம் பரிசு	2 4 6	ரூபா.	100/-	988
10ஆம் பரிசு	2 4	ரூபா.	50/-	9777
11ஆம்பரிசு	B	ரூபா.	20/-	38980

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,367,810.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,682,771.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

மெகா பவர் MEGA POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 0858
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES
திகதி: 19.07.2021

ஆங்கில எழுத்து: C
கப்பர் இலக்கம்: 22
வெற்றி இலக்கங்கள்: 04 07 16 33

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுத் தொகை ரூ.	வெற்றி பெற்றோர்
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000,000.00	0
2 ஆம் பரிசு	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000.00	1
3 ஆம் பரிசு	இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000.00	81
4 ஆம் பரிசு	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	500.00	196
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	100.00	4605
6 ஆம் பரிசு	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	40.00	3018
7 ஆம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	20.00	75319
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	20.00	13801

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 137,518,898.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,642,620.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk
ஜாதிக லொதரஸ் போர்ட்
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

கிழக்கு மாகாணத்தில் கொரோனா கோரத் தாண்டவம்; 24 மணிநேரத்தில் 144 பேருக்கு தொற்று – அறுவர் பலி

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் நேற்று மாலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 144 பேர் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்ட நிலையில், 6 கொவிட் மரணங்களும் இடம்பெற்றுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார். கொரோனா நிலைவரங்கள் தொடர்பில் நேற்று (19) மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நேற்று மாலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் கல்முனையில் 69 பேர், மட்டக்களப்பு மாவட்டத்தில் 50 பேர், திருகோணமலையில் 13, அம்பாறையில் 12 பேர் எனவும் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் 3 மரணங்கள், மட்டக்களப்பில் 01, கல்முனையில் 02 என ஆறு மரணங்களும் பதிவாகியுள்ளன. மொத்தமாக மூன்றாம் அலையின் பின் 13,457 கொவிட் நோயாளர்கள் பதிவாகியுள்ளார்கள். 304 மரணங்களும் மொத்தமாக பதிவாகியுள்ளன. இதனை

கருத்திற்கொண்டு மக்கள் அவதானத்துடன் சுகாதார வழிமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவும், சமூக இடைவெளிகளை பேணுதல், முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டு கழுவுதல் போன்ற விடயங்களைச் செய்து அரசின் கட்டுப்பாடுகளுக்கு அமைய நடந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் காலங்கள் விடுமுறை மற்றும் பண்டிகை, பெருநாள் காலமாகையால் தேவையற்ற ஒன்றுகூடல்கள், வெளிச்செல்லல் என்பனவற்றை தவிர்க்கவும்.

இலங்கையில் மிக வேகமாக கொழும்பு பகுதிகளில் புதிய வகை டெல்ட்டா வைரஸ் பரவி வருகிறது. இவ்வாறான நோய்த் தாக்கத்தில் இருந்தும் பாதுகாப்புப் பெற முன்கூட்டிய சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். எதிர்வரும் சனிக்கிழமை 26ஆம் திகதி முதல் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பிரிவில் கொரோனா தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இதனைப்பெற உரிய பொதுச் சுகாதார பரிசோதகர், கிராமசேவகர் ஆகியோரை அணுகி உரிய இடங்களைத் தீர்மானித்து தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ளுமாறும் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

கேரள கஞ்சா கடத்தியவர் காரைதீவில் கைது

(பாறுக் ஷிஹான்)

கேரளா கஞ்சாவினை முச்சக்கரவண்டியில் கடத்திச் சென்றவரை சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு சந்திப்பகுதியில் நேற்று (19) மதியம் கல்முனை விசேட பிரிவின் தகவலுக்கமைய இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய காரைதீவு சந்திக்கு அருகில் சம்மாந்துறை பொலிஸார் தேடுதல் நடத்தி சுமார் 43 வயதுடைய கல்முனை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரை ஒரு கிலோ கேரள கஞ்சாவுடன் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதாகிய சந்தேகநபர் உட்பட அவர் பயணம்செய்த முச்சக்கரவண்டி சான்று பொருட்கள் சகிதம் சம்மாந்துறை பொலிஸ்

நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மட்டு. போதனா வைத்தியசாலைக்கு மாவட்ட சாரணர் சங்கத்தினரால் 10 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கிவைப்பு

(கனகராசா சரவணன்)

கொரோனா தொற்று நோயாளிகளுக்கு பயன்படுத்தும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கம், மட்டு. போதனா வைத்தியசாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு நேற்று (19) மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் ஊடாக வழங்கிவைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் விவேகானந்தா பிரதீபன் இலங்கை சாரண சங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, உலக சாரணர் சங்கத்தினாலும், சென்.தோமஸ் பழைய சாரணர் சங்கத்தினாலும், 10 இலட்சம் ரூபா பெறுமதியான கொரோனா வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்க முன்வந்தனர்.

இதன் பிரகாரம் இந்த வைத்திய உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மாவட்ட சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் விவேகானந்தா பிரதீபன் மற்றும் சாரணர் சங்கத்தினர் கலந்துகொண்டு மட்டு. போதனா வைத்தியசாலை நுண்ணுயிரியல் துறை விசேட வைத்திய நிபுணர் பி.தேவகாந்த் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வைத்திய அதிகாரிகளிடம் இந்த வைத்திய உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வாகனேரி மக்களுக்கு நிவாரண உதவி

(மீராவோடை நிருபர்)

மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வாகனேரி கிராம மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் எடுத்துக்கொண்ட துரித முயற்சி காரணமாக இந்த உதவி வழங்கப்பட்டது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட வாகனேரி கிராமத்தில் கடந்த 15 ஆம் திகதி ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக சுமார் 30 வீடுகள் சேதமடைந்ததுடன், அப் பகுதியிலுள்ள மரங்களும் முறிந்து விழுந்தன.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், பிரதேச சபை உறுப்பினர்களான வை.யோகஸ்வரன்,

கிருபை ராசா மற்றும் ரமீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த கிராம மக்களின் நலன் கருதி இந்த உதவியை வழங்கிய கட்டார் நாட்டில் தொழில் புரியும் சமூக சேவகர் ரமீஸ் என்பவருக்கு தவிசாளர் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகளின் பிரகாரம் கல்முனை-01 ஏ யாட் வீதியைச் சேர்ந்த செல்வி சுதாகரன் கிரிஷானா இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசியப் பாடசாலையின் பழைய மாணவியான இவர் தற்சமயம் இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தாதியல் விஞ்ஞானப் பிரிவின் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

இவர் ஓய்வுநிலை நில அளவையாளர் குழந்தைவேல் சுதாகரன் மற்றும் ஆங்கிலப் பாட ஆசிரியை சுமித்திரா சுதாகரன் தம்பதியினரின் புதல்வியும், பொறியியலாளர் சுதாகரன் நுபேந்தனின் சகோதரியுமாவார்.

கிழக்கு மாகாண ஆளுநரும் கடற்படைத் தளபதியும் சந்திப்பு

(கிண்ணியா நிருபர்)

கிழக்குக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜெயரத்னவுக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துக்கும் இடையே சந்திப்பொன்று நேற்று (19) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கொவிட்-19 தொற்று நோயைக் கட்டுப்படுத்த பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், மாகாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதிலும், நகரங்களின் பாதுகாப்பிலும் பங்களித்தமைக்காக ஆளுநர் தனது நன்றியைக் கடற்படைத் தளபதிக்கு இதன்போது தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்கு புதிய உப தவிசாளராக ஏ.ஜீ.அமீர் தெரிவு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்கு புதிய உப தவிசாளரை தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்று (19) சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச சபையில் உப தவிசாளராக செயற்பட்டு வந்த யூ.எல்.அஹமட் இராஜினாமா செய்ததன் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில், தவிசாளர் ஏ.எம்.நௌபர் முன்னிலையில் இடம்பெற்ற இத்தெரிவில் ஏ.ஜீ.அமீர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

18 உறுப்பினர்களைக் கொண்ட ஓட்டமாவடி பிரதேச சபையின் நேற்றைய உப தவிசாளர் தெரிவில் 12 உறுப்பினர்கள் மாத்திரமே கலந்துகொண்டனர்.

உப தவிசாளர் தெரிவில் முஸ்லிம் காங்கிரஸ்

கட்சியின் இரண்டு பெண் உறுப்பினர்கள் கலந்துகொண்டதுடன், ஐந்து ஆண் உறுப்பினர்கள் சமுகமளிக்கவில்லை.

இதில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ், சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஏ.அக்பர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு – சுவிஸ் கிராமத்தில் பூட்டிய வீட்டை உடைத்து ஒரு இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பணம் – தங்கநகை கொள்ளை

திருடனைப் பிடிக்க பொலிஸார் வலைவீச்சு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சுவிஸ் கிராமப் பகுதியில் பூட்டியிருந்த வீடொன்றின் கூரையை உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த ஒரு இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தங்கச்சங்கிலி, கைத்தொலைபேசி என்பவற்றை திருடிச்சென்ற சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் உரிமையாளர் உட்பட அனைவரும் சம்பவ தினத்தன்று இரவு சுமார் 8 மணிக்கு வீட்டைப் பூட்டிவிட்டு கோவிலுக்கு குடும்ப சகிதமாக சென்று, இரவு 10 மணியளவில் திரும்பி வந்து வீட்டைத்திறந்தபோது, வீட்டின் கூரையை உடைத்து, வீட்டுக்குள் நுழைந்து, அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 888 ரூபா பணம், ஒன்றே கால் பவுண் எடையுடைய தங்கச்சங்கிலி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதைக் கண்டறிந்தனர்.

இதனையடுத்து பொலிஸாருக்கு முறைப்பாடு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸ் தடவியல் பிரிவு வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்துக்கு பரிசோதனை நுண்ணோக்கி கருவி அன்பளிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கிணங்க ஆய்வுகூடத்திற்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆய்வுகூட பரிசோதனைக்கான தொலைநோக்கி நுண்ணோக்கி கருவி ஒன்றை அன்பளிப்பாக என்.கே.டி.ரட்ணம் குரூப் கம்பனியின் தலைவரும், பிரபல தொழில் அதிபருமான கலாநிதி பி.நல்லரெட்ணம் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஊடாக வைத்தியசாலைக்கு நேற்று (19) வழங்கிவைத்தார்.

மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நுண்ணுயிர் துறை விசேட வைத்திய நிபுணர் பி.தேவகாந்தன், உட்பட வைத்தியர்கள் மற்றும் என்.கே.டி.ரட்ணம் குரூப் கம்பனி தலைவர் கலாநிதி பி.நல்லரெட்ணம், என்.கே.டி.ரட்ணம் பிரைவேட் லிமிட்டெட் கம்பனி பணிப்பாளர் என்.டிலக்ஜன், எஸ்.கே.ஜீலன் பிரைவேட் லிமிட்டட் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஜீலன் ஆகியோர் கலந்துகொண்டு தொலைநோக்கி நுண்ணோக்கி கருவியை அரசாங்க அதிபரினூடாக போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்திற்கு அன்பளிப்பாக வழங்கிவைத்தனர்.

இதேவேளை, கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் போதனா வைத்தியசாலைக்கு கொரோனா பரிசோதனைக்கான 15 இலட்சம் ரூபா பெறுமதியான பி.சி.ஆர். இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளதாகவும் இந்த ஆய்வுகூட கருவி இல்லாமல் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாக வைத்தியர் தேவகாந்தன் கோரிக்கையையடுத்து, இந்த

மாவட்ட மக்கள் நன்மையடைவதற்காக இந்த தொலைநோக்கி நுண்ணோக்கி கருவியை வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளதாக பிரபல தொழில் அதிபர் கலாநிதி பி.நல்லரெட்ணம் தெரிவித்தார்.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 74 ஆவது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு!

(மட்டக்களப்பு)

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 74ஆவது சிரார்த்த தின நிகழ்வு நேற்று (19) மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

அதனடிப்படையில் கல்லடி - உப்போடை மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதியில் சிவானந்தா வித்தியாலய அதிபர் ந.சந்திரகுமாரின் ஒழுங்கமைப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி தட்சயானந்தா ஜீ மஹராஜ், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபைத் தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் ச.ஜெயராஜா மற்றும் சிவானந்தா வித்தியாலய ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

அடிகளாரது சமாதிக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து பாடல் பாடி ஜனனதின நிகழ்வுகள் சுகாதார முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு திருநீற்றுப் பூங்காவில் அமைந்துள்ள சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் மு.பவளகாந்தனின் தலைமையில் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து வின்சன்ட் மகளிர் தேசிய

பாடசாலையின் மாணவிகளால் சுவாமி விபுலானந்தரின் ''வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ'' எனும் பாடலும் இசைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். அத்தோடு சுவாமியின் சிரார்த்த தின நிகழ்வுகள் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவ வளாகத்திலும் இடம்பெற்றிருந்தது.

இதன்போது சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவ வளாகத்தில் அமையப்பெற்றுள்ள சுவாமியின் திருவுருவச்சிலைக்கு நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி திருமதி பாரதி கெனடி தலைமையில் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், சூம் (zoom) தொழில்நுட்பத்தினூடாக நினைவுப்பேருரை நிகழ்வொன்றும் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கல்முனை வடக்கில் 7 பேருக்கு கொரோனா தொற்று

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு சுகாதாரப் பிரிவினரால் 53 பேருக்கு நேற்று (19) மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு செயற்பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கல்முனை வடக்கு சுகாதாரப்பிராந்தியத்திற்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் மூன்றாவது அலையில் இதுவரை 168 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும், ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானவர்களோடு தொடர்புபட்டவர்களுக்கும் என 53 பேருக்கு நேற்று (19) மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் பெரியநீலாவணையில் 3 பேருக்கும், கல்முனையில் 3பேருக்கும், பாண்டிருப்பில் ஒருவருக்கும் என 7 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சூழலை அழிக்க யாரையும் அனுமதிக்க முடியாது; சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்துமாறு அறிவுறுத்து

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்

(கிண்ணியா நிருபர்)

சுற்றுச்சூழலை அழிக்கும் மணல் அகழ்வை நிறுத்த எடுக்கப்பட்ட தற்போதைய நடவடிக்கைகளை மாற்றியமைப்பதில் நம்பிக்கை இல்லை என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

பேரழிவைக் கண்ட பின்னர் சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்துமாறு பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.

சேதனப் பசளை குறித்த பயிற்சிப்பட்டறை முடிந்ததும், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த செயலமர்வானது உப்புவெளி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

திருகோணமலையில் மணல் அகழ்வு மிகவும் நியாயமற்ற முறையில் நடைபெற்று வருவதாக பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. மணலைத் தோண்டி எடுப்பதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், மணல் சுரங்கத்தின் அளவையும், மணல் தோண்டக் கூடாத இடங்களில் தோண்டுவது பொருத்தமானதல்ல என்பதையும் புரிந்துகொள்ள எனக்கு போதுமான அறிவுள்ளது. மணல் சுரங்கமின்றி இங்கு எதுவும் செய்யமுடியாத அளவுக்கு கடல் மட்டம் உயர்ந்தால் விரைவில் என்ன நடக்கும்? நாங்கள் மிகவும் முக்கியமான இடத்தில் இருக்கிறோம். மகாவலி நதி கடலில் விழும் இடம் நாங்கள். அங்கு மணல் அகழ்வாராய்ச்சி செய்யும்போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். எனவே, அநியாய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்துமாறு அனைத்து இராணுவ உயர் அதிகாரிகளுக்கும், பொலிஸ் படையினருக்கும் அறிவித்தது நான்தான். அந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை.

மணல் உரிமம் கேட்க 100 க்கும் மேற்பட்டோர் என்னிடம் வந்துள்ளனர். கடந்த ஆண்டுக்குள் எல்லோரிடமும் அப்படித்தான் சொன்னேன். சூழலை அழிக்க அனுமதிக்க முடியாது. சரியான முறைகளின்படி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் போது அதைச் செய்வதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார். இந்நிகழ்வில் மாகாண பிரதமச் செயலாளர் துசித பி. வணிகசிங்க, பேராசிரியர் சமன் வீரக்கொடி, முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திருகோணமலையில் ஹெரோயினுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சிறைச்சாலை உத்தியோகத்தரொருவரைக் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (19) காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை - மட்கோ, மஹமாயபுர பகுதியைச் சேர்ந்த ஏ.துலாஜ் மதுசங்க (30 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைவாக குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் சென்ற மோட்டார் சைக்கிளை சோதனையிட்ட போது, அவரிடமிருந்து 14 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

குறித்த நபர் திருகோணமலை சிறைச்சாலையில் கடமையாற்றி வரும் சிறைச்சாலை உத்தியோகத்தர் (ஜெயிலர்) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் பொத்துவில் வைத்தியசாலைக்கு விஜயம்

(பொத்துவில் நிருபர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் லால் பனபிட்டிய ஆகியோர் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (18) விஜயம் மேற்கொண்டனர்.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் அழைப்பின் பேரில் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்டதுடன், வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் வைத்திய அத்தியட்சகருடன் கலந்துரையாடினர்.

வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளுக்கும் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் ஆகியோர் அங்குள்ள தேவைகள் குறித்தும் கேட்டறிந்ததுடன், அவற்றை நிவர்த்திசெய்து தருவதாகவும் உறுதியளித்தனர்.

அதனைத் தொடர்ந்து பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் லால் பனபிட்டிய, பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இயங்கிவரும் கொரோனா சிகிச்சை விடுதியினையும் பார்வையிட்டதுடன், பொத்துவில் பிரதேசத்தின் கொரோனா நிலைமைகள் தொடர்பாகவும் வினவினார்.

கல்முனை பிராந்திய ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் புதிய கட்டடம் கையளிப்பு

(சர்ஜுன் லாபீர்)

கல்முனை பிராந்தியத்திற்கான ஆயுர்வேத பாதுகாப்பு சபைக்கான உத்தியோகபூர்வ கட்டடம் நேற்று (19) கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியினால் ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் கிழக்கு மாகாண பொதுச் செயலாளர் டொக்டர் ஏ.சி.டில்சாத்திடம் கையளிக்கப்பட்டது.

சுமார் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான இக்கட்டடம் கல்முனை இஸ்லாமபாத் கிராமத்தில் அமையப் பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் கல்முனை பிரதேச உதவி தலைவர் வைத்தியர் கே.வை.சுந்தர்நாதன், பொருளாளர் வைத்தியர், பி.எம்.அப்துல் காதர், பாதுகாப்பு சபை உறுப்பினர் எம்.எம்.மின்கார், பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல்.யாஸீன் பாவா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம் ஹசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி

(பாண்டிருப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் தரம்-6 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கருப்பை கழுத்து புற்றுநோயைத் தடுப்பதற்கான தடுப்பூசி மற்றும் தரம்-07 இல் கற்கும் மாணவர்களுக்கான தடுப்பூசியேற்றும் பணிகள் பிரதேச பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரன் வழிகாட்டலில், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில், இச்செயற்றிட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நேற்று (19) பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 70 மாணவர்களுக்கு இத்தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. இப்பணியில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எஸ்.கணேஷன், எஸ்.ஜீவிதன் ஆகியோர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை பிராந்தியத்திற்கு அடுத்த வாரம் 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்படுமென உறுதி

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை பிராந்தியத்திற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் அசேல குணவர்தன தலைமையிலான சுகாதார அமைச்சின் உயர்மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் (18) விஜயம் செய்தனர். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக கொரோனா தொற்று நோயின் முதலாவது அலையில் ஆரம்ப நாள் தொடக்கம் தற்போது வரையிலான இதன் தாக்கம் குறித்தும், சுகாதாரத்துறையினர் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் சிரமங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டன. அதேபோன்று வைத்தியசாலைகளின் குறைபாடுகள், தேவைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்களான டொக்டர் பி.டப்ளியூ.சி.எல்.பனப்பிட்டிய, டொக்டர் ஜி.சுதத் கே.தர்மரத்ன, ஆய்வுகூட சேவைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் டொக்டர் விஜித் குணசேகர, தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆயந்தி கருணாரத்ன, மருந்து விநியோக பணிப்பாளர் டொக்டர் கபில விக்ரமநாயக்க உட்பட நிர்வாக வைத்திய அதிகாரிகள் மற்றும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக், கல்முனை பிராந்திய சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி.சுகுணன், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை, பொத்துவில் ஆதார வைத்தியசாலைகளுக்கும் விஜயம் செய்து தேவைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர், அடுத்த வாரம் கல்முனை பிராந்தியத்திற்கு 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்படுமென உறுதியளித்ததுடன், நிந்தவூர் மற்றும் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிற்கு தேவையான அபிவிருத்தி வளங்களை விரிவுபடுத்துவதற்கான பணிகளை விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஆசிரியரிடம் பிரம்பு கொடுத்த குரங்கு!

(மீராவோடை நிருபர்)

பாடசாலை வளாகத்தில் நின்ற ஆசிரியர் ஒருவரிடம் குரங்கு ஒன்று பிரம்பை வழங்கிச் சென்ற சுவாரஸ்ய சம்பவமொன்று நேற்று (19) இடம்பெற்றுள்ளது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு இணையவழி கற்கை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அதனை ஆசிரியர் ஒருவர் கண்காணித்துக் கொண்டு நின்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த குரங்குக் கூட்டத்தில் ஒரு குரங்கு, மேல்மாடியில் இருந்து பிரம்பு ஒன்றை ஆசிரியரிடம் போட்ட சுவாரஸ்யமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு அப்பகுதியில் சுற்றித்திரியும் குரங்குகள் மனிதர்களைக் கண்டதும் சேட்டைகள் செய்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஹஜ் பெருநாள் குர்பான் நடவடிக்கைகளை தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நாடகமே மாடறுப்பு தடை

இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சாடல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஹஜ் பெருநாள் குர்பான் நடவடிக்கைகளை தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நாடகமே மாடறுப்பை தடைசெய்யுமாறு அமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதம் - என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த அரசுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல பக்க அழுத்தங்கள் காணப்படுகின்றன. அவர்களின் வெளிநாட்டுக் கொள்கையால் கடனை செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

மற்றொரு பக்கம் இனவாதத்தைக்கொண்டு பொய்களை கூறி ஆட்சிக்குவந்த இவர்கள் கூறிய பொய்களை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். இதனால் இவர்களை ஆட்சிக்கு கொண்டுவந்த கடும்போக்கு அமைப்புகளே அரசுக்கு எதிராக

களமிறங்கியுள்ளனர்.

இவ்வாறு பல பக்க அழுத்தங்களை எதிர்கொள்ளும் அரசு இந்த அழுத்தங்களிலிருந்து விடுபட தமக்கு எதிராக உள்ள கடும்போக்கு அமைப்புகளை அமைதிப்படுத்த மேற்கொண்டுள்ள முயற்சியே மாடறுப்பு தடை தொடர்பாக அமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதம்.

இதன்மூலம் அடுத்தவார ஹஜ்ஜுப் பெருநாள் நாட்களில் முஸ்லிம்கள் மேற்கொள்ளும் குர்பான் நடவடிக்கைகளை குழப்பவே அரசு முயற்சிக்கிறது.

இந்தச் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். அதன்பின்னரே இச்சட்டமூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு குறித்த அமைச்சுக்கு உள்ளது.

ஆனால், இவர்கள் வர்த்தமானியில் வெளியிட்டவைகளையே இன்னமும் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றனர். வர்த்தமானியில் வெளியிடப்படாத ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்பது வேடிக்கையாக உள்ளது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத விடயத்தை நடைமுறைப்படுத்த அமைச்சின் செயலாளருக்கு எந்த அதிகாரமுமில்லை. ஆகவே இது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாம் நாளை (நேற்று) நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் பேச எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் போதைப்பொருள் வியாபாரி டிலக்ஷன் உட்பட மூவர் கைது

13 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனைக்கு காரில் வியாபாரத்துக்காக 13 இலட்சம் ரூபா பெறுமதியான 100 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்திச்சென்ற போதைப்பொருள் வியாபாரி டிலக்ஷன் உட்பட மூவரை வாழைச்சேனை கும்புறுமூலை சந்தியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலையிலுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றினையடுத்து நேற்று முன்தினம் இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கும்புறுமூலைச் சந்தியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனையை நோக்கி பயணித்த காரை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது காரில் மறைத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 13 இலட்சம் ரூபா பெறுமதியான 100 கிராம் பிரபல போதைப்பொருள் வியாபாரியான டிலக்ஷன் உட்பட மூவரை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த குறித்த போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டபோது குறித்த வியாபாரியும் அவரது தாயாரும் தப்பியோடிய நிலையில், 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை கைதுசெய்ததுடன், அங்கு போதைப்பொருள் பொதிசெய்யும் இயந்திரங்கள் உட்பட பலவற்றை விசேட அதிரடிப்படையின் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

அம்பாறை மாவட்டத்தில் சேதனப் பசளையின் பயன்பாடு தொடர்பில் விளக்கமளிக்கும் பயிற்சி

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சேதனப் பசளை மற்றும் இயற்கை பீடைநாசினியை பயன்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததிகளுக்கு நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் சம்மாந்துறை மேற்கு விவசாய விரிவாக்கல் பிரிவினால் மலையடிக் கிராமத்தில் விவசாயப் போதனாசிரியர் எம்.ரி.பஸ்லுனா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது மண்புழுக்களை பயன்படுத்தி சேதன உரம் தயாரிக்கும் முறை, குறுகிய காலத்தில் கூடுதலான உற்பத்திகளை மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை முறைகள் சம்பந்தமாகவும் விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி நடைபெற்றது.

சேதனப் பசளையை பயன்படுத்துவதால் நாம் பல்வேறு நன்மைகளை பெறுகின்றோம். குறிப்பாக, எமது விவசாய மண் பாதுகாக்கப்படுகிறது. அதிகளவிலான விளைச்சலை பெறமுடியும். அதுபோன்று நஞ்சுத்தன்மையில்லாத உணவு உற்பத்தியை மேற்கொள்வதால் எமது எதிர்கால சந்ததிகளை ஆரோக்கியமான சமூகமாக கட்டியெழுப்ப முடியும். இன்று எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள அதிகளவான நோய்த்தாக்கத்திற்கு காரணமாக இருப்பது எமது உணவுப் பழக்கமும் இரசாயன பயன்பாடும்தான். இதனை விவசாயிகளான நீங்கள் மாற்றியடைக்க முன்வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த செயல்முறை பயிற்சி வகுப்பில் சம்மாந்துறை வலய உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.எல்.எம்.சல்மான், பாடவிதான உத்தியோகத்தர் ஜீ.குணநீத ராசா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட விவசாயிகள் பலரும் கலந்துகொண்டனர்.

திருகோணமலை - குச்சவெளியில் மஞ்சள் அறுவடை



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திரியாய் கிராமத்தில் மஞ்சள் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பொதுமக்களுக்கு வீட்டில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த மஞ்சள் செய்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் நாட்டில் ஏற்பட்டுள்ள மஞ்சள் தட்டுப்பாட்டினை நிவர்த்திசெய்யும் நோக்கிலேயே திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

திரியாய் 5ஆம் வட்டாரத்தில் வசித்துவரும் கிருபா என்ற நபரே தமது வீட்டில் சேதனப் பசளையை பயன்படுத்தி தமது விவசாய செய்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போது நாட்டில் பசளை தட்டுப்பாடு, பசளை இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், தமது சுற்றுப்புறச்சூழலில் காணப்படுகின்ற மாட்டின் சாணம், குப்பைக் கூளங்கள், வீசப்படுகின்ற உணவுப்பொருட்களை பயன்படுத்தி கத்தரி, மிளகாய், ஊறுகாய் மற்றும் இதர மரக்கறி வகைகளையும் உற்பத்திசெய்து வருவதாகவும் குறிப்பிட்டனர்.

இதுபோன்று ஒவ்வொரு வீடுகளிலும் சேதனப் பசளையை பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தத்தமது வீடுகளில் மரக்கறி செய்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஓட்டமாவடி – மஜ்மா நகர் வீதியை செப்பனிட அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(மீராவோடை நிருபர் – எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளைக் கொண்டுசெல்லும் மஜ்மா நகர் வீதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ஏ.எல்.சமீம், சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த வீதியை அமைக்க கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பத்து இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்தார்.

சிற்றாலய சொரூபங்களை தாக்கிய விஷமிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

(வீரமுனை நிருபர்)

எந்த இன மத மக்களாக இருந்தாலும் உணர்வுகளையும் வழிபாட்டு மையங்களையும் மதிக்கவேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

கத்தோலிக்க சிற்றாலய சொரூபங்கள் மீதான தாக்குதல் தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கத்தோலிக்க மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களிலுள்ள சிற்றாலய சொரூப வழிபாட்டு மையங்கள் திட்டமிட்டு சேதப்படுத்தப்பட்டமையினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கடந்த திங்கள்முதல் புதன்வரையான மன்னார் பொலிஸ் பிரிவு, மன்னார் மறை மாவட்டத்திற்குட்பட்ட ஆறு வழிபாட்டுத்தலங்களில் அமைந்துள்ள திருச்சொரூப கண்ணாடிக்கூடுகள், ஆலயத்திலுள்ள பொருட்கள் சேதமாக்கப்பட்டமையினால் அவ்வாறான விஷம சக்திகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டனைகள் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

அனைத்து வழிபாட்டு மையங்களும் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டவையே தவிர, பிழையான காரியங்களை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல. எனவே, அந்த அடிப்படையில் சொரூபங்கள் மீதான தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. மன்னார் மாவட்டத்தில் மத ரீதியான ஒரு குழப்பகர சூழல் உருவாகியுள்ளதனால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் இருக்கிறது - என்றார்.

ஜே.வி.பியினரும் எதிர்க்கட்சியினரும் நாடு முழுவதும் செய்கின்ற ஆர்ப்பாட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டின் முடிவல்ல

மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன்

(வீரமுனை நிருபர்)

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின்போது மட்டக்களப்பில் அரசியல் ரீதியாக வாக்கு வங்கியில் மிகப் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது - என தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

பட்டிருப்பு வலய பாடசாலை மாணவர்களுக்கு டெப் கணினிகள் வழங்கும் நிகழ்வு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம் தலைமையில் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். அத்தோடு நாட்டை ஆட்சிசெய்கின்ற பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து வியாழேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

ஆக கிட்டத்தட்ட கிழக்கில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களின் வாக்குகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்திருக்கின்றன. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளை கோட்டாபய அரசுக்கு பெற்றுத்தந்த கிழக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து அபிவிருத்தியடைந்த மாவட்டங்களாக வளர்த்தெடுக்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அதைவிட கிழக்கில் அதிகூடிய தமிழர்கள் வாழ்கின்ற மாவட்டமாக மட்டக்களப்பு இருப்பதனால் விரும்பியோ விரும்பாமலோ மாகாணத்துக்கான தலைமைத்துவத்தையும் மாகாண நிர்வாக விடயங்களையும் பலமாகப் பார்க்கவேண்டிய பொறுப்பும் கடமையும் இருக்கிறது.

அந்த அடிப்படையில், இவற்றையெல்லாம் நிவர்த்திசெய்வதற்கு அயராத முயற்சி எடுக்கவேண்டிய தேவையுள்ளது. அதேபோன்று பொறுப்புமிக்க அரசாங்கம் பெரும்பான்மைப் பலத்தோடு இயங்கினாலும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திப் பணிகளில் ஒன்றாக இணைந்து பயணிக்கவேண்டிய பொறுப்பு சந்திரகாந்தன் ஆகிய எனக்கும் சதாசிவம் வியாழேந்திரனுக்கும் இருக்கிறது. எதிர்காலத்திலும்

பலமான கட்டமைப்பை உருவாக்குவதற்கு நாம் இருவரும் மாவட்டத்தின் சார்பாக பாடுபடுவோம்.

ஏற்கனவே ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகின்றபோது கிழக்கின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளதனால் எழுச்சிபெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் நிவர்த்திக்க வலயமும் பாடசாலை அதிபர்களும் மாணவர்களும் கடினமாக உழைக்கவேண்டியுள்ளது. நலிவடைந்த பாடசாலையின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு எல்லோரும் பாடுபட வேண்டியுள்ளது.

டெப் கணினிகள், இணைய வசதிகள், தேசிய பாடசாலையாக தரமுயர்த்தல் என்பவற்றை எல்லைப்புற கிராம பாடசாலைகள் எதிர்வரும் காலங்களில் பெறும் என்பதை நம்புகிறேன். அதேபோன்று மாகாண மட்டப் பாடசாலைகளை அடுத்த ஆண்டிலே தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கு பாடுபடுவோம்.

அரச நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பயிலுனர்களாக நியமிக்கப்பட்டவர்களை கிழக்கு பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமித்துள்ளோம். அவ்வாறான பட்டதாரிப் பயிலுனர்களை பாடத்திற்கேற்றாற்போல் நிரந்தர ஆசிரியர்களாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன். அந்த அடிப்படையில் நாங்கள் எல்லோரும் கல்வியை கட்டியெழுப்புவதற்கு உறுதியான நிலையுடன் பாடுபட வேண்டும். அதனோடு ஒட்டியதாக பொருளாதார ரீதியாகவும் அரசாங்கத்தினை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்பு செய்யவேண்டும்.

ஆங்காங்கே ஜே.வி.பியினரும் எதிர்க்கட்சியினரும் மாகாண, பிரதேச சபை உறுப்பினர்களை பகடைகளாக பயன்படுத்தி நாடு முழுவதும் செய்கின்ற ஆர்ப்பாட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டின் முடிவாக மாறிவிடாது. ஆகவே, மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள், அழுத்தம் கொடுக்கிறார்கள் என்று எண்ணிவிடவேண்டாம். இவையெல்லாம் விவசாயிகளைப் பயன்படுத்தி திட்டமிட்டு செய்கிற காரியங்களாக இருக்கின்றன.

ஜனாதிபதியின் உறுதியான சேதனப்பசளை உற்பத்தி வேலைத்திட்டம், எதிர்கால சந்ததித் தேவைக்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது. எங்களுடைய பிள்ளைகள், எதிர்கால சந்ததியினர் உறுதியாக வாழவேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முடிவுகள் அமுலாக்கப்படும். ஆகையினால் இப்போதிருந்து அடுத்த போகத்திற்கான சேதனைப் பசளை உற்பத்தியினை ஒவ்வொருவரும் தயாரிப்பதுடன், அதனை ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் விவசாய பிரதேசம் என்ற அடிப்படையில் எங்களுடைய விவசாய விளைநிலங்கள் வீழ்ச்சியடையாமல் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். விவசாயம் நலிவடைந்துவிடாமல் சேதனப்பசளை உற்பத்திக்கு கடுமையாக எல்லோரும் உழைக்கவேண்டிய தேவையுள்ளது - என்றார்.

கொக்கிளாய் - முகத்துவாரம் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் தென்னிலங்கையர்கள்

முல்லைத்தீவு மீனவர்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளதாக ரவிகரன் குற்றச்சாட்டு

(வன்னி நிருபர்)

முல்லைத்தீவு - கொக்கிளாய், முகத்துவாரம் பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோத மீன்படி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் இதனால் அந்த பிரதேசத்திலுள்ள கடல்வளங்களும் மீனவர்களும் பெரிதும் பாதிப்படைவதாகவும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் கொக்கிளாய் பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டனர். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் ஏறத்தாழ தென்னிலங்கையைச் சேர்ந்த 300 மீனவக் குடும்பங்கள் தமது பதிவை மேற்கொண்டு அங்கு வசித்துவருகின்றனர். அவர்கள்கூட எமது தமிழ் மக்களின் பூர்வீக காணிகளில் அத்துமீறிக் குடியிருக்கின்றனர் என்ற தகவலை ஏற்கனவே நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

கொக்கிளாய், முகத்துவாரம் பகுதியிலுள்ள காணிகளுக்குச் சொந்தமான தமிழ் மக்கள் தற்போது கொக்கிளாய் - புளியமுனை என்னும் இடத்தில் வசித்துவருகின்றார்கள். கொக்கிளாய்-முகத்துவாரம் பகுதியில் தென்னிலங்கை மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை மீட்டெடுக்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

இந்நிலையில், இந்தப் பகுதியில் ஏறத்தாழ 300 தென்னிலங்கை மீனவக் குடும்பங்கள்தான் வசித்துவருவதாக சொல்லப்படும் நிலையில், முகத்துவாரம் பகுதியிலிருந்து ஏறத்தாழ ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட படகுகள் சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்காக படையெடுத்துச் செல்வதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக, அந்தப் படகுகளில் ஒவ்வொருவர் வீதம் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை போன்ற சட்டவிரோத தொழில்களுக்காக சென்றுகொண்டிருக்கின்றனர். இவ்வாறாக ஆயிரத்து ஐநூறு பேருக்கு மேல் படகுகளில் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதன்பின்னர் இவ்வாறு கடலுக்குள் போனவர்கள் அங்கு சட்டவிரோத தொழில்களின் மூலம் அதிக மீன்களைப் பிடித்ததும், கடலிலிருந்து கரையில் இருக்கும் தெற்கைச் சேர்ந்த தமது சகாக்களுக்கு தொலைபேசிமூலம் அழைப்பை ஏற்படுத்துவார்கள். இவ்வாறு அழைப்பை ஏற்படுத்தியவுடன் கரையில் இருப்பவர்கள் சுருக்குவலைகளுடன் கடலுக்குள் செல்வார்கள். அவ்வாறு கிட்டத்தட்ட 300இற்கும் மேற்பட்ட தெற்கைச் சேர்ந்த படகுகள் இரண்டாவது தடவையாகவும் கடலுக்குள் செல்வதாக இங்குள்ள தமிழ் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இரண்டாவது தடவை செல்லும் 300இற்கும் மேற்பட்ட படகுகளில் ஒவ்வொரு படகுகளிலும் நான்கு தொடக்கம் ஆறு வரையான நபர்கள் கடலை நோக்கிச் செல்வதாகவும், அவர்களும் அங்கு சென்று சட்டவிரோத டைனமைட், சுருக்குவலைகளை பயன்படுத்தி மீன்களை அள்ளிவருவதாகவும் அங்குள்ள தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது அரசாங்கத்தினால் பல கட்டுப்பாடுகள் மற்றும் பயணத்தடை விதிக்கப் பட்டிருக்கும் நிலையில், மாகாணத்திற்கு மாகாணம் போக்குவரத்துத் தடைசெய்யப் பட்டிருக்கும் நிலையில் இவர்கள் எவ்வாறு கொக்கிளாய் முகத்துவாரம் பகுதிக்கு வந்தார்கள். சட்டவிரோதமாக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன்மூலம் முல்லைத்தீவில இருக்கும் பாரிய கடல்வளத்தை அழித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் வாடிகளுக்கு அருகிலேயே கடற்படை முகாம் ஒன்று அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோதமாக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் குற்றச்சாட்டில் இவர்களை கைது செய்தாலும், இலஞ்சங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவிப்பதாக அப்பிரதேசத்திலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். சட்டவிரோத கடற்றொழிலுக்காக தெற்கைச் சேர்ந்தவர்கள் திரள் திரளாக படகுகளில் செல்வதை நாம் நேரடியாக அவதானித்தோம்.

கிட்டத்தட் 72 கிலோமீற்றர் தூரமுள்ள முல்லைத்தீவு கடற்கரையோரத்தில், கொக்கிளாய் தொடக்கம் பேப்பாரப்பிட்டிவரையில் கடற்றொழில் செய்யும் தமிழ் மீனவர்கள் இப்படியான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டைச் செய்யவில்லை. தமிழ் மீனவர்கள் சிறுதொழில்களையும், தமது படகுகள் மூலமாக ஒரு ஒழுங்கான கட்டமைப்புடன்கூடிய தொழில்களைத்தான் செய்துவருகின்றனர்.

இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் என்ன பார்த்துக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத தொழில்களைக் கட்டுப்படுத்தாது, திணைக்களங்களில் இருந்தபடியே தூங்கிக்கொண்டிருக்கின்றனரா?

மக்கள் பிரதிநிதிகள் எங்கே? கடற்றொழில் அமைச்சர் என்ன பார்த்துக்கொண்டிருக்கிறார்? கடற்படையினர் என்ன செய்துகொண்டிருக்கின்றனர்? அத்தோடு இந்த பயணத்தடைக் காலங்களில் தெற்கிலிருந்து இவ்வாறு கொக்கிளாய் முகத்துவாரத்திற்கு வருவதற்கு இவர்களுக்கு அனுமதியை வழங்கியது யார்?

இவ்வாறு தெற்கிலிருந்து மீனவர்கள் வரும்போது, வீதித்தடைகளை ஏற்படுத்தி பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர் என்ன பார்த்துக்கொண்டிருந்தார்கள்? என பல்வேறு கேள்விகள் எழுகின்றன. எங்களுடைய முல்லைத்தீவுக் கடலின் பாரிய கடல்வளம் தெற்கைச் சேர்ந்த மீனவர்களின் சட்டவிரோத தொழில்களால் கொள்ளையடிக்கப்படுகின்றது.

எமது முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மீனவர்களே பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதைவிட கரைவலை வளைப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்காமல் இவர்களின் அட்டகாசங்கள் தொடர்கின்றன. கரைவலைத் தொழிலில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் தெற்கைச் சேர்ந்த சட்டவிரோத தொழிலில் ஈடுபவர்களால் மிரட்டப்படுவதாகவும் அங்குள்ள தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்

இந்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு எதிராக கடற்றொழில் திணைக்களமோ அல்லது இதற்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சரோ உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசாங்கத்துக்கு எதிர்த்தரப்பு வழங்கிய வெற்றிவாய்ப்பு

இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் சுட்டிக்காட்டு

நாடாளுமன்றத்தில் அதிகமான வாக்குகள் மூலம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சியினர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தை கலைத்திருந்தனர். ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்திருந்த சந்தர்ப்பத்தில் கபீர் ஹாசீம் உட்பட அப்போதைய அமைச்சில் அமைச்சர்களாக பலர் அமைச்சுப் பதவிகளை துறந்து ரிஷாட் பதியுதீனை காப்பாற்றியிருந்தனர்.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் அரசாங்கத்துக்குள் பிளவொன்றை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். ஆனால், நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் எதிர்க்கட்சிதான் பல குழுக்களாக பிளவுற்றுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர் குழுவில்கூட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையிலுள்ள காரணிகள் குறித்து இணக்கப்பாடுகள் இல்லை.

அதிக வாக்குகள் மூலம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சியினர் ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் எமக்குள்ளும் சில பிரச்சினைகள் உள்ளன. ஆனால், அரசாங்கம் அமையப்பெற்று 20 மாதங்களின் பின்னர்தான் எரிபொருள் விலையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலையில் அதிகரிப்பு செய்யப்பட்டது. கடந்த காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் எரிபொருளில் கிடைக்கப்பெற்ற இலாபத்தில்தான் வழங்கப்பட்டது - என்றார்.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையில் குறைப்பு

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனா பரவுவதற்கான ஆபத்து இன்னும் நீங்க வில்லை - என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொரோனா நோய்த்தொற்றுகளை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

தற்போது நாடு முழுவதும் உள்ள சகல மாவட்டங்களிலும் தடுப்பூசி செலுத்தும் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதால் பி.சி.ஆர். பரிசோதனைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகின்ற போதிலும், கொரோனா பரவுவதற்கான ஆபத்து இன்னும் நீங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, மக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் தொடர்ந்தும் பேச்சு

சட்ட மா அதிபர் அறிவிப்பு

மத்திய வங்கியின் முதலாவது முறிகள் மோசடி தொடர்பில் தொடரப்பட்டுள்ள வழக்கின் முதலாவது பிரதிவாதியான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்தல் சட்டத்தின்கீழ் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் இரு நாட்டு சட்ட மா அதிபர்களுக்கும் இடையில் தொடர்ந்தும் தகவல்கள் பரிமாறப்பட்டு வருவதாக சட்ட மா அதிபர் நேற்று மேல் மாகாண நிரந்தர மூவரடங்கிய நீதிபதிகள் குழாமுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த பேச்சுவார்த்தை வெற்றியளிக்காவிடின் அர்ஜுன மகேந்திரனின்றி வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு சட்ட மா அதிபர் எதிர்பார்த்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான தெரிவித்தார்.

இருநாடுகளினதும் சட்ட மா அதிபர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை வெற்றியளிக்காவிட்டால் சட்ட மா அதிபரால் எடுக்கப்படும் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் நீதியரசர் குழாத்தின் தலைவராக செயற்படும் சம்பா ஜானகி ராஜரத்ன வினவியமைக்கே இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பத்தாவது பிரதிவாதியான சிங்கப்பூரில் வசிக்கும் பேர்ப்பச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான அஜான் புஞ்சிஹேவா, தற்சமயம் மலேஷியாவுக்குச் சென்றுள்ளதால் அவரின்றி வழக்கை தொடர்ந்தும் முன்கொண்டுசெல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரியந்த நாவான நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

2015 பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கி முறிகள் ஏலத்தில், அரசுக்கு சொந்தமான 688 மில்லியனுக்கும் அதிக நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி நம்பிக்கையை சீர்குலைத்த குற்றச்சாட்டில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் பத்தினிகே சமரசிறி உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சம்பா ஜானகி ராஜரத்ன மற்றும் நாமல் பலல்லே உள்ளிட்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பில் சட்ட மா அதிபர் எடுக்க வுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகளை அறிக்கையிடுவதற்காக வழக்கை எதிர்வரும் செப்டம்பர் 22ஆம் திகதிவரை ஒத்திவைத்து நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

முதலாம் தர மாணவர் சேர்க்கை விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

2022 ஆம் ஆண்டு முதலாம் தர மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஓகஸ்ட் 7ஆம் திகதிவரை இதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளதுடன், முன்னர் இவ்விண்ணப்பத்திற்கான முடிவு திகதி இம்மாதம் 31ஆம் திகதி என கல்வியமைச்சு அறிவித்திருந்தது.

பெசில் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கை தொடர்ந்தும் நடத்துவது பற்றி ஆராய்க

அவரது சட்டத்தரணிகள் சட்ட மா அதிபரிடம் கோரிக்கை

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2016 ஆம் ஆண்டில் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஜீ.ஐ.குழாய் வழக்கை தொடர்ந்தும் நடத்துவது தொடர்பில் ஆராயுமாறு அவரது சட்டத்தரணிகள், சட்ட மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கோரிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு சட்ட மா அதிபர் தயாராகவுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்லா நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களினால் கோரிக்கை விடுக்கப்படாதபோதிலும், திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான 365 இலட்சம் ரூபா செலவில் ஜீ.ஐ. குழாய்களை கொள்வனவுசெய்து அவற்றை உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அமில கித்சிறி ரணவக்க விற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு அரசின் கூட்டுத் தீர்மானம்; அமைச்சர் ஒருவர் மட்டும் இதற்கு பொறுப்பல்ல!

பந்துல குணவர்தன சபையில் தெரிவிப்பு

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் அமைச்சரவை உபகுழுவின் ஊடாகவே எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு அமைச்சர் மீது குற்றச்சாட்களை சுமத்தி கூட்டுப் பொறுப்பிலிருந்து நழுவும் அரசாங்கம் நாம் அல்ல - என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொவிட் தொற்றுக்கு மேலதிகமாக எமது நாடு சமகாலத்தில் மூன்று முக்கிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. முதலாவது பிரச்சினை அரச நிதி தொடர்பிலான நெருக்கடியாகும். இரண்டாவது அந்நிய செலாவணி தொடர்பிலானது. மூன்றாவது நாட்டை முழுமையாக பின்நோக்கி நகர்த்தி பொருளாதாரத்தை சீர்குலைக்கும் முயற்சிக்கு எதிரணியின் நெருக்கடியாகும்.

எதிர்க்கட்சியினர் மக்களுக்கு சலுகைகளை வழங்குமாறு கூக்குரலிட்டாலும் மக்களிடம் பெறப்படும் வரியில்தான் சலுகைகளை வழங்க முடியும். நேரடி மற்றும் மறைமுக வரியில் பெறப்படும் வரிதான் அரசின் 85 சதவீதமான வருமானமாகவுள்ளது. வரி அல்லாத வருமானத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபத்துடன் இயங்கினால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். இல்லாவிடின் அரச கட்டடங்கள் மற்றும் காணிகளை குத்துகைக்கு வழங்குவதன் ஊடாக வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, மறைமுக மற்றும் நேரடி வரியில்தான் அரச வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

2020ஆம் ஆண்டில் 1216 பில்லியன் தான் முழு நாட்டிலும் வரி வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளது. அரசை அன்றாடம் நடத்திச்செல்ல செலவழிக்கப்படும் நிதிதான் அரச சேவையாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள். 1051 பில்லியன் ரூபா சம்பளம் மற்றும் கொடுப்பனவுக்காக செலவழிக்கப்பட்டுள்ளது. 165 பில்லியன் நிதிதான் மீதமாகிறது.

165 பில்லியனில் எவ்வாறு சமூர்த்தி பயனாளிகளுக்கு சமூர்த்தி கொடுப்பனவுகளை வழங்க முடியும்? அரசு பெற்றுள்ள கடன்களுக்கு எவ்வாறு வட்டித் தொகையை செலுத்துவது? ஏனைய அரச செலவுகளை எவ்வாறு தாங்கிக்கொள்வது?. சுதந்திரத்தின் பின்னர் குறிப்பாக 1978ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமையப்பெற்ற அனைத்து அரசாங்களுக்கும் வரி வருமானத்தில் மாத்திரம் தமது செலவீனங்களை மேற்கொள்ள முடியாதுபோனது. ஒவ்வொரு வரவு – செலவுத்திட்டமும் பற்றாக்குறையுடன் தான் சமர்ப்பிக்கப்பட்டன.

2020ஆம் ஆண்டில் 233 பில்லியன்தான் வற் வரியாக உள்ளது. மக்களால் சுமையை தாங்கிக்கொள்ள முடியாது என்பதால்தான் வற் வரியை ஜனாதிபதி குறைத்திருந்தார். வற் வரி அதிகரிக்கப்பட்டால் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும். ஆகவே, மக்களுக்கு சலுகைகளை வழங்கவேண்டுமென்றால் வரியை மக்களிடமிருந்தே பெறவேண்டியுள்ளது. இல்லாவிட்டால் கடனை பெறவேண்டியுள்ளது. இல்லாவிட்டால் நாட்டின் சொத்துகளை விற்பனை செய்ய வேண்டும்.

எரிபொருளில் அதிகமான வருமான கடந்த 2017, 2018ஆம் ஆண்டுகளில்தான் கிடைக்கப்பெற்றது. நாட்டை கடந்த அரசாங்கமே முழுமையாக நாசமாக்கியது. நாசமாக்கப்பட்ட நாட்டையே நாம் மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அமைச்சரவை உபகுழுவின் தீர்மானத்தின் பிரகாரமே எரிபொருள் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது. ஒரு அமைச்சரை தனிமைப்படுத்தும் அரசாங்கம் நாம் அல்ல. கூட்டுப் பொறுப்புடன் இயங்கும் அரசாங்கமாகும். உதய கம்மன்பில மிகவும் திறைமைவாய்ந்த இளம் அமைச்சராகும். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை படுதோல்வியடையும் என்றார்.

மேலதிக நேரக் கொடுப்பனவை கோரி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார சேவைகள் பணியாளர்கள் மற்றும் பரிசோதகர்கள், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தும், தமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கக்கோரியும் நேற்று (19) மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை குறித்த பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தமக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர், நவம்பர் மற்றும் இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை மட்டுப்படுத்தி 60 மணித்தியாலங்கள் மாத்திரம் வழங்கி இருந்தார்கள்.

60 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக பணியாளர்கள் மேற்கொண்ட நேரங்களுக்கான கொடுப்பனவை இதுவரை காலமும் தமக்கு வழங்கவில்லையென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக பல தடவைகள் எழுத்து மூலமாகவும், தொழிற்சங்க அடிப்படையிலும் பணியாளர்கள் ஒன்றிணைந்து வைத்தியசாலையில் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை.

கடந்த 2 ஆம் திகதி குறித்த விடயம் தொடர்பில் கடிதமொன்றை பணிப்பாளருக்கு அனுப்பியிருந்தோம். கடந்த 9 ஆம் திகதிக்கு முன் சரியான முடிவை வழங்குமாறும், அவ்வாறு சரியான முடிவு கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்திருந்தோம்.

பணியாளர்களாகிய எங்களை வைத்தியசாலை நிர்வாகம் தொடர்ந்தும் ஓரவஞ்சனையாக நடத்தும் நிலையில், இன்றைய தினம் (நேற்று) திங்கட்கிழமை காலை பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தோம்.

மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கக்கோரி மேற்கொண்ட நடவடிக்கைகளை தோல்வியடைந்த நிலையிலேயே குறித்த போராட்டத்தை முன்னெடுத்ததாகத் தெரிவித்தனர். மன்னார் மாவட்டத்தைத் தவிர வடக்கிலுள்ள ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற பணியாளர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படுகின்றது.

எனவே, எமக்கு சரியான தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற சுகாதார சேவைகள் பணியாளர்கள் மற்றும் பரிசாதகர்கள் தெரிவித்தனர்.

4 மணிநேர சுற்றிவளைப்புகளில் 3009 பேர் கைது

நாடுபூராகவும் 4 மணிநேரம் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 3 ஆயிரத்து 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய கடந்த 17ஆம் திகதி மாலை 6.00 மணிமுதல் இரவு 10.00 வரை குற்றச்செயல்கள் மற்றும் வாகன விபத்து தொடர்பான விசேட சுற்றிவளைப்புகள் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நாட்டில் தற்போது நிலவும் கொவிட் - 19 தொற்றுப்பரவல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தும் வகையில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமையலும் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை பின்பற்றியும் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக 14 ஆயிரத்து 927 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பொலிஸ் சோதனைகளுக்கு பயன்படுத்தப்படும் 52 பொலிஸ் நாய்களின் உதவியும் இந்த நடவடிக்கைகளுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில், ஆயிரத்து 250 விஷத்தன்மை கொண்ட போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 645 குற்றுவாளிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 431 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 05 சட்டவிரோத துப்பாக்கிகளும் கைபற்றப்பட்டுள்ளன. மேலும், மதுபோதையில் வாகனம் செலுத்தியது தொடர்பில் 580 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 5 ஆயிரத்து 654 வாகனங்கள் தொடர்பான வேறு வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பகளின் போது 3 ஆயிரத்து 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் , அவர்களில் 162 சந்தேகநபர்கள் கைவிரல் அடையாளங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கைவிரல் அடையாளங்களை அடையாளம் காணப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னரே குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என சுட்டிக் காட்டியுள்ளது.

கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை சபையில் தோற்கடிப்போம்

நீதி அமைச்சர் அலி சப்ரி நம்பிக்கை

(சபை செய்தியாளர்கள்)

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்போமென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு இறுதிவரை எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை நடத்தினர். அக்காலத்தில் நாட்டில் எவ்வித யுத்தமும் இருக்கவில்லை. கொவிட் பிரச்சினையும் இருக்கவில்லை. 2005ஆம் ஆண்டுமுதல் 2015ஆம் ஆண்டுவரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் 7.2 சதவீதம் சராசரியாக வளர்ச்சி கண்டிருந்தது. ஆனால், கடந்த அரசாங்கத்தில் இருந்த பொருளாதார நிபுணர்கள் எவ்வித பிரச்சினையும் இல்லாது நாட்டின் பொருளாதாரத்தை மறுபக்கம் திருப்பினர். 2.1 சதவீதம் வரை வளர்ச்சியை குறைத்தனர்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எரிபொருள் மூலம் பாரிய இலாபம் கிடைக்கப்பெற்றது. 2019ஆம் ஆண்டில்தான் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம்பெற்றது. ஆனால், அதற்கு முன்னரே பொருளாதாரத்தை நாசமாக்கவிட்டனர். நாம் மீண்டும் அரசாங்கத்தை அமைத்ததும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம். வற் வரியைக் குறைத்தோம். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருந்த சந்தர்ப்பத்தில்தான் கொவிட் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளோம். நாடு முடக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்கு அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். எரிபொருளில் கிடைக்கப்பெற்ற வருமானத்தில் நாட்டையே முகாமைத்துவம் செய்துள்ளோம். அமைச்சர் அந்த இலாபத்தை தமது வீட்டுக்கு கொண்டுசெல்லவில்லை. ஆகவே, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்போம் என்றார்.

இரண்டு சட்டமூலங்கள் சபாநாயகரால் சான்று

(சபை செய்தியாளர்கள்)

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தம்) மற்றும் சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தம்) ஆகிய சட்டமூலங்களைத் தான் சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் நேற்று திங்கட்கிழமை அறிவித்தார்.

இதற்கான சான்றுரைப்படுத்தலை கடந்த 15ஆம் திகதி சபாநாயகர் வழங்கியுள்ளார். இலங்கை அரசியலமைப்பின் 79ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் சபாநாயகர் இந்த சான்றுரைப்படுத்தலை வழங்கியுள்ளார்.

இந்த சட்டமூலங்கள் கடந்த 6ஆம் திகதி வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

ரிஷாட் பதியுதீன் எம்.பி. ஏன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்?

ரணில் விக்கிரமசிங்க சபையில் கேள்வி

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் ஏன் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும், ஹரீன் பெர்னாண்டோ எம்.பி.யைக் கைதுசெய்வதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பிலும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் நாடாளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் சிறப்புரிமை குறித்து தான் சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் ஆஜராகி விளக்கமளித்துள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருப்பது குறித்த எம்.பி.யினதும் நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமையை மீறும் செயல் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ரிஷாட் பதியுதீன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் இன்றுவரை தெரிவிக்கப்படவில்லை. அதற்கான காரணத்தை அறிய நாடாளுமன்றத்திற்கு உரிமை இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் எந்தப் பிரிவை அவர் மீறியதற்காக கைதானார் என்பது தெளிவில்லை. ரிஷாட் பதியுதீனின் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. அரசியலமைப்பிற்கு அப்பால் சென்று பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்த முடியாது. பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டும். பொதுமக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தி பொதுநலவாய நாடாளுமன்ற அமைப்பு மற்றும் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திற்கு இந்த விவகாரத்தை கொண்டு செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு எதிரான தேசிய ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (19) பெலவத்தையிலுள்ள கல்வியமைச்சின் எதிரில் இடம்பெற்ற போது... (படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்)

குற்றம் துவிர்

ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் கைது - பியகம

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கட வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் 5.30 மணியளவில் பியகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 01 கிலோ 132 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பியகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று இவர் பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், 72 மணிநேரத்துக்கு தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மோதரை

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேனமுல்ல பிரதேசத்தில், நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 25 கிராம் 690 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு மோதரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.கொழும்பு-15 ஐச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய களனி பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 11 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டி - 20 தோட்டப்பகுதியில், நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் பொரளை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 07 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பியகம

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு அருகில், பியகம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 05 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலுமொரு சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வேபட பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

மோதரை

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேனமுல்ல பிரதேசத்தில், நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் மோதரை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 04 கிராம் 330 மில்லிகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் சந்தேநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-14ஐச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கியுடன் ஒருவர் கைது - கெகிராவ

கெகிராவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிருகிரணகம பிரதேசத்தில், நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கெகிராவ பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, சட்டவிரோத மதுபானத் தயாரிப்புக்கு பயன்படுத்தும் 360 லீற்றர் கோடா மற்றும் சட்டவிரோத மதுபானத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கெகிராவ பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோடாவுடன் ஒருவர் கைது - பாதுக்கை

பாதுக்கை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலகல பிரதேசத்தில், நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் பாதுக்கை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோத மதுபான தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் 1093 லீற்றர் கோடா மற்றும் மதுபானத் தயாரிப்புக்கு பயன்படுத்தும் உபகரணம் என்பவற்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பாதுக்கை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் 29ஆம் திகதி அவிசாவளை நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டு சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தொகுப்பு: நா.தினுஷா

அரசியல்வாதிகள் சிலரால் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துகள் அசௌகரியங்களை ஏற்படுத்தலாமென அஞ்சவேண்டியுள்ளது

கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கவலை

அரசியல் இலக்குகளை அடைந்துகொள்கின்ற நோக்கோடு அரசியல்வாதிகள் சிலரினால் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துகள் தங்களுடைய எதிர்காலத்திற்கு தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளதாக கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமாகாணத்தில கடலட்டைப் பண்ணை உருவாக்கும் திட்டம் தொடர்பாக அண்மைக்காலமாக வெளியாகின்ற கருத்துகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் பொது மண்டபத்தில் இரணைதீவு பிரதேச கடற்றொழில்சார் சங்கங்களின் பிரதிநிதிகளினால் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பணம் பெற்றுக்கொள்ளப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்த கருத்துக்கு தமது அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடலட்டைப் பண்ணை உருவாக்கம் என்பது அன்றாடம் காட்சிகளாகவும் பொருளாதார அடிமைகளாகவும் வாழ்ந்துவந்த எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற வரப்பிரசாதமாகவே கருதுகின்றோம்.

கடந்த காலங்களில் அனைத்தையும் இழந்து, நாதியற்றவர்களாக இருந்த எங்களுக்கு, கடலட்டைப் பண்ணை உருவாக்கமென்பது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினாலும் தற்றுணிவான தீர்மானங்களினாலும் கடந்த ஒன்றரை வருடங்களில் வடமாகாணத்தில் சுமார் 250இற்கும் மேற்பட்ட

பண்ணைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் நூற்றுக்கணக்கான கடலட்டைப் பண்ணைகளை அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நக்டா நிறுவனத்தின் வடக்கு மாகாணத்திற்கான பிரதானி அண்மையில் தெரிவித்துள்ளார். இது உண்மையிலேயே மகிழ்ச்சியான செய்தியாகும்.

ஏனெனில், ஏற்கனவே இரணைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த எமக்கு இதுவரை 83 கடலட்டைப் பண்ணைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் எமது பிரதேசத்தில் விண்ணப்பித்திருக்கின்றார். அவர்களுக்கும் பண்ணைகள் வழங்கப்படுகின்ற பட்சத்தில் எமக்கான எதிர்காலத்தை நாம் வளமானதாக உருவாக்கிக்கொள்ள முடியும்" - என்று தெரிவித்தனர்.

இதன்போது, கடலட்டைப் பண்ணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தலா பத்து இலட்சம் ரூபா செலுத்தவேண்டியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினரால் தெரிவித்த கருத்து தொடர்பான ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள்,

"நாங்கள் யுத்தத்தினால் நாடோடிகளாக அலைந்து அனைத்தையும் இழந்து, நாளாந்த வாழ்க்கையில் எமது அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கே திண்டாடிக்கொண்டு இருக்கின்றவர்கள். அப்படிப்பட்ட நாங்கள் தலா பத்து இலட்சம் கொடுத்து கடலட்டைப் பண்ணைகளை பெற்றிருக்கின்றோம் என்று தெரிவித்திருப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

இவ்வாறான பொறுப்பற்ற முறையில் கருத்துகளை வெளியிடுவதை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் போன்றவர்கள் நிறுத்தவேண்டும். அவர்களிடம் நாம் மன்றாட்டமாக கேட்கின்றோம். தயவுசெய்து வைக்கோல் பட்டடை நாய்கள் போன்று செயற்படாதீர்கள்.

உங்களால் செய்யமுடியாவிட்டாலும் பரவாயில்லை. ஏனையவர்கள் செய்வதை இடையூறு செய்யாமல் விலத்தியிருங்கள். நீங்கள் அரசியல் நலன்களை அடைந்துகொள்வதற்காக வெளியிடுகின்ற இவவாறான கருத்துகளினால், கடலட்டைப் பண்ணை உருவாக்கம் தடைப்படுமானால், விண்ணப்பித்துவிட்டு பண்ணைகளுக்காக காத்திருக்கின்ற நூற்றுக்கணக்கானோரின் வாழ்வாதாரத்திற்கான மாற்றுத் திட்டம் உங்களிடம் என்ன இருக்கின்றது என்று கேட்க விரும்புகின்றோம்" - என்று தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

அதேவேளை, கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்து தெரிவித்த இரணைதீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள்,

"கௌதாரிமுனை விவகாரம் பற்றிய புரிதல் இல்லாதவர்களினாலும், அரசியல் நோக்கங்களுக்காகவும், ஒருசில தரப்பினரிடம் நல்ல பிள்ளை பெயரை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் சில தரப்பினரால் குறித்த விவகாரம் ஊதிப் பெருப்பிக்கப்பட்டுள்ளது.

இரணைதீவு பகுதியில் கடலட்டைப் பண்ணை உருவாக்கப்பட்ட காலத்தில் பல்வேறு தரப்புகள் பண்ணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகளையும் அழுத்தங்களையும்கூட பிரயோகித்தனர். ஆனால், உள்ளூர் மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிடிவாதமான நிலைப்பாடு காரணமாகவே இரணைதீவு பண்ணைகள் எமக்கு கிடைத்திருந்தன. இதேபோன்ற பிரச்சினைகள் ஏனைய இடங்களிலும் எதிர்கொள்ளப்பட்டதை நாம் அறிந்திருக்கின்றோம்.

எனவே, கௌதாரிமுனையில் வெளியார் பண்ணை அமைந்திருப்பது தொடர்பாக நாம் பதற்றமடையத் தேவையில்லை. அதனால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைச்சர் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.

நாம் அறிந்தவரையில், கடலட்டை குஞ்சுகளை பராமரிக்கின்ற நேசரிகளே அங்கு அமைக்கப்பட்டுள்ளன. ஏராளமான கடலட்டை குஞ்சுகள் பராமரிப்புக் காலத்தில் உயிரிழக்கின்றன. எம்மால் முட்டைகளில் உற்பத்திசெய்யப்படுகின்ற குஞ்சுகளில் 10 வீதமானவை மாத்திரமே நேசரி பாராமரிப்பைத் தாண்டி பண்ணைகளுக்கு கொண்டுசெல்லப்படுகின்றன. ஆனால், சீனாவில் இது 30 வீதமாக காணப்படுகின்றது.

கடலட்டை குஞ்சு உற்பத்தி மற்றும் பராமரிப்பு போன்ற விடயங்களில் எம்மைவிட சீனர்களுக்கு நிறைய அனுபவமும் அறிவும் இருக்கின்றமையே இதற்குக் காரணமாகும். குறித்த விடயங்களை நாமும் பயன்படுத்திக்கொள்வது எமது வருமானத்தை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும்

அதனைவிட எமது பிரதேசத்தில் கடலட் டைப் பண்ணைகள் சடுதியாக அதிகரித்து வருகின்றமையினால், கடலட்டை குஞ்சுகளின் தேவையையும் விரைவாக நிவர்த்திசெய்யவேண்டிய தேவை இருப்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, நாம் எடுத்தோம் கவுத்தோம் என்று விடயங்களை அணுகாது எம்மை நாடிவருகின்ற விடயங்களை அணுகுவதில் பன்னாடைகளாக இருக்காமல், அன்னப்பட்சிகளாக இருந்து எமக்குத் தேவையான விடயங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாகப் பார்ப்போமானால், எமது பிரதேசங்களில் சில துறைசார் நிபுணர்களின் பற்றாக்குறை காணப்படுவதனால் வெளியிலிருந்து அவ்வாறான நிபுணர்களை அழைத்து வந்து எமது தேவைகளை நிறைவுசெய்கின்றோம். அதைபோன்றே இதனயும் அணுக வேண்டுமே தவிர, பதற்றமடைந்து எமது தலைகளில் நாமே மீண்டும் மீண்டும் மண்ணை போட்டுக் கொள்ளக்கூடாது" - என்று தெரிவித்துள்ளனர்.

குறித்த ஊடகச் சந்திப்பில், கிராஞ்சி ஸ்ரீமுருகன் கடற்றொழிலாளர் சங்கம், வலைப்பாடு கடற்றொழிலாளர் சங்கம், நாச்சிக்குடா புனித யாகப்பர் கடற்றொழிலாளர் சங்கம், இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் இரணைதீவு கடலட்டைப் பண்ணை சங்கம் ஆகியவறறின் நிர்வாகிகள் கலந்துகொண்டு கருத்துகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமரர் சிவசிதம்பரத்தின் 98ஆவது பிறந்த தினம் இன்று அனுஷ்டிப்பு

தமிழ்த் தலைவர்களில் ஒருவரான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 98ஆவது பிறந்ததினத்தையொட்டி இன்று 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்பாடுசெய்துள்ளது

நிகழ்வில் நெல்லியடி மத்தியபஸ்நிலையசதுக்கத்திலும் கரவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்திலும் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலிப்பார்கள்.

அமரர் சிவசிதம்பரம் உடுப்பிட்டி நல்லூர்த் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1965 காலப்பகுதியில் உப சபாநாயகராகவும் பணியாற்றியவர்.

எம்மால் முடியாது என்ற அனைத்தையும் மக்களை சென்றடைய வழிவகுத்தோம்

அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு

எம்மால் முடியாது என்று கூறிய அனைத்து விடயங்களையும் மக்களைச் சென்றடைய வழிவகுத்தோம். அதேபோன்றே யாழ். மக்களின் வீட்டுத்திட்டப் பிரச்சினையும் விரைவில் தீர்த்துவைக்கப்படும் - என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சிலர் அரசியல் நோக்குடன் நாம் செய்யும் வேலைத்திட்டங்களைக் குறை கூறி நிரூபிக்க முடியாத ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக எம் மீது முன்வைத்து வருகின்றனர்.

அவ்வாறு ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் மக்களை திசைதிருப்பி அபிவிருத்தித் திட்டங்களை நேர்மையான முறையில் மக்களிடம் கொண்டுசென்று சேர்க்கவிடாமல் செய்கின்றனர். அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்கள் உணரக்கூடாது என்பதே அவர்களின் பிரதான நோக்கம்.

ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் வடக்கு-கிழக்கு புறக்கணிப்பு என்றார்கள். ஆனால், அவ்வாறு கூறி ஒரு வாரத்திற்குள் முதற்கட்ட நியமனம் வழங்கப்பட்டது. அதேபோல் அரசியல் கைதிகள் விடுதலை சாத்தியம் இல்லை என்றார்கள். அதுவும் நடந்தேறிவிட்டது. நிறைவான கிராமம் திட்டத்திற்கு நிதியே வராது என்றார்கள். நிதி வந்து திட்டமும் நிறைவேறிவிட்டது.

வீட்டுத்திட்டம்

இதேபோன்று யாழ். மக்களின் வீட்டுத்திட்டப் பிரச்சினையும் உரிய தேவைப்பாடுடைய பயனாளிகளை நிச்சயம் சென்றடையும்.

எமக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாமல் இருங்கள். மக்களுக்கு கிடைப்பதனை கிடைக்க விடுங்கள். மக்களைப் புதைத்து, அவர்களுக்கு வரும் அபிவிருத்திகளைத் தடுத்து அரசியல் செய்யாதீர்கள்.

தற்போது 'கிராமத்துக்கு ஒரு வீடு' திட்டம் மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் திட்டங்கள் ஊடாக வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

'கிராமத்துக்கு ஒரு வீடு' திட்டத்தில் கடந்த வருடம் யாழ். மாவட்டத்திற்கு ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான 435 வீடுகள் கிடைக்கப்பெற்றன. இவ்வருடமும் 435 வீடுகள் கிடைக்கப்பெற்று 115 வீடுகளுக்கான பணிகள் முடிந்துவிட்டன. மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக கடந்த வருடம் முகாம்களில் இருக்கும் மக்கள் குடியேற 75 வீடுகள் வழங்கப்பட்டன. இவ்வருடம் மீள்குடியேற்ற அமைச்சு ஊடாக யாழ். மாவட்டத்திற்கு பத்து இலட்சம் ரூபா பெறுமதியான 1532 வீடுகளும், ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான 630 வீடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக பத்து இலட்சம் வீடுகள் புள்ளித்திட்டம் ஒன்றின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்திற்கு இருபதாயிரம் வீடுகள் தேவைப்படும் இடத்தில் தற்போது இரண்டாயிரம் வீடுகள் வரையில் கிடைக்கப்பெற்றுள்ளன.

வீட்டுத்திட்டம் தொடர்பான கோரிக்கைகள் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலர், மாவட்ட செயலர் மற்றும் அரசியல் பிரதிநிதிகளிடம் விடுக்கப்படுகிறது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிக்கும் இதில் பொறுப்புள்ளது. தேவைப்பாடுள்ளவர்களை அடையாளப்படுத்தி சிபாரிசு செய்வதனை பல அரசியல் பிரதிநிதிகள் செய்கின்றனர். ஆனால், புள்ளித்திட்டம் ஊடாகவே பயனாளிகள் தெரிவு இடம்பெறுகின்றது. உண்மையாக தேவை உடையவர்களுக்கு மட்டுமே வீடு கிடைக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் வழங்கப்பட்ட 800இற்கும் மேற்பட்ட வீடுகள் மக்கள் குடியேறாமல் இன்றும் உள்ளன. பல வீடுகள் தேவையுடையவர்களுக்கு வழங்கப்படாமல் ஏனையோருக்கு வழங்கியதால் அவை இன்று சுற்றுலா விடுதிகளாக இருக்கும் நிலையும் உள்ளது. அவ்வாறான நிலை இனி ஏற்படாமல் தேவைப்பாடுடையவர்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும். அதற்கான பணிகளை அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

சுவாமி விபுலானந்தரின் 74ஆவது நினைவுதினம்

(வவுனியா நிருபர்)

உலகத்தின் முதலாவது தமிழ் பேராசிரியரும் முத்தமிழ் வித்தகர் என புகழ்பெற்றவருமான சுவாமி விபுலானந்த அடிகளாரின் 74ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்ட து,

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், விபுலானந்தர் தொடர்பான நினைவுப் பேருரையை வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழருவி சிவகுமாரன் ஆற்றியிருந்தார்.

நிகழ்வில் நகர சபை செயலாளர், நகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகள் என பலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி கௌதாரிமுனை கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி நிருபர்)

பூநகரி கௌதாரிமுனை கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நண்பர்களோடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கௌதாரிமுனைக்கு சுற்றுலா சென்ற இளைஞர்கள் அங்குள்ள கடலில் குளித்துள்ளனர். இதன்போதே இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கியுள்ளார். கடலில் மூழ்கிய இளைஞரை நண்பர்கள் ஆபத்தான நிலையில் மீட்டு பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மீசாலையைச் சேர்ந்த 30 வயதான தபாலக உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு பதவியேற்பு

யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு நேற்றுக் காலை தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா கொழும்பு இராணுவத் தலைமையகத்திற்கு இடமாற்றலாகி சென்றுள்ள நிலையில், கொழும்பு இராணுவ கட்டளை தலைமையகத்தில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு நேற்றுக் காலை சுபவேளையில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக பலாலி இராணுவ கட்டளை தலைமையகத்தில் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

1996இல் முல்லைத்தீவு படைத்தளத்தில் கொல்லப்பட்ட 1169 படையினருக்கு அஞ்சலி

(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு படைத்தளத்தில் 1996ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 1169 படையினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு முல்லைத்தீவு பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு ஜூலை 18, 19ஆம் திகதிகளில் முல்லைத்தீவு பகுதியில் உயிரிழந்த 1169 படையினர் நினைவாக முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் நினைவுத்தூபியில் 25ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இலங்கை இராணுவப் பிரிவின் சிங்ஹ றெஜிமன்ட், விஜயபாகு றெஜிமன்ட் படைப்பிரிவைச் சேர்ந்த படைவீரர்களே 1996ஆம் ஆண்டு முல்லைத்தீவு படைத்தளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் கொல்லப்பட்டார்கள்.

அவர்கள் நினைவாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் நினைவுத்தூபி அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் நினைவு நிகழ்வு நடைபெறுவது வழமை.

இவர்கள் நினைவாக 2010ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சிசிர பிலப்பிட்டிய உள்ளிட்ட படைத்தபளபதிகள், அதிகாரிகள் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தியுள்ளார்கள்.

இதன்போது கொக்குளாய் விகாரையின் விகாராதிபதியினால் உயிரிழந்த படைவீரர்களுக்காக பிரித் ஓதி தானம் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

சிறப்பாக 1996ஆம் ஆண்டு முல்லைத்தீவு போரின்போது தந்தையை பலிகொடுத்த மகன் தற்போது ஒரு இராணுவ அதிகாரியாக அந்த இடத்திற்கு வந்து தந்தைக்காகவும் அதன்போது உயிரிழந்தவருக்காகவும் வணக்கம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய செய்திகள்

ராஜீவ் கொலை வழக்கு: எழுவருக்கு விடுதலை கிடையாது

“ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள்தண்டனை அனுபவித்துவரும் ஏழு பேரை விடுதலைசெய்ய முடியாது.” - இவ்வாறு சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு தயாரித்துள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் டில்லிக்குச் சென்றுள்ள தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, ‘‘உங்கள் பதவிக்காலம் முடிந்துவிட்டது. விரைவில் புதிய ஆளுநர் நியமிக்கப்படவுள்ளார்’’ என சூசகமாக ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டுவிட்டது

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள்தண்டனை அனுபவித்துவரும் ஏழு பேரை விடுதலைசெய்வது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு இதுபற்றி ஒரு குறிப்பு தயார்செய்து கொடுத்துள்ளார்.

அதில், ‘‘முன்னாள் பிரதமர் கொலை வழக்கில் குற்றவாளிகளை விடுவிப்பது சரியல்ல. இதில் சிலருக்கு மரணதண்டனை கிடைத்தாலும் பின் அதை உச்ச நீதிமன்றம் ஆயுள்தண்டனையாக குறைத்துவிட்டது. எனவே, இந்த கொடூரமான கொலைக்கு காரணமானவர்களை விடுதலைசெய்ய முடியாது. பரோலில் வேண்டுமானால் சில காலம் அவர்கள் வெளியே இருக்கலாம்’’ என அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

‘சூர்யா 40’ படத்தின் ‘பெர்ஸ்ட் லுக்’ 22இல்

நடிகர் சூர்யா, இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகிவரும் படத்தில் நடித்து வருகிறார். தற்காலிகமாக சூர்யா 40 எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில், சூர்யாவிற்கு ஜோடியாக பிரியங்கா மோகன் நடிக்கிறார். சத்யராஜ், தேவதர்ஷினி, சரண்யா பொன்வண்ணன் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இமான் இசையமைக்கிறார். முழுவீச்சில் நடைபெற்றுவந்த இப்படத்தின் படப்பிடிப்பானது கொரோனா இரண்டாம் அலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தற்போது கொரோனா பாதிப்பின் தாக்கம் குறைந்து இயல்புநிலை திரும்பி வருவதையடுத்து, மீண்டும் படப்பிடிப்பைத் தொடங்கியுள்ள படக்குழு, சூர்யா, பிரியங்கா மோகன் சம்பந்தப்பட்ட முக்கிய காட்சிகளைப் படமாக்கி வருகிறது.

இந்நிலையில், படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு குறித்த அறிவிப்பை சன் பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் ஜூலை 22ஆம் திகதி மாலை 6 மணிக்கு ‘சூர்யா 40’ படத்தின் ‘பெர்ஸ்ட் லுக்’ போஸ்டரானது வெளியிடப்படவுள்ளது. நடிகர் சூர்யா ஜூலை 23ஆம் திகதி தன்னுடைய பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். அதனை முன்னிட்டு ‘பெர்ஸ்ட் லுக்’ போஸ்டரானது வெளியிடப்படுகிறது.

“செல்பி எடுத்தால் ரூ.100 தரணும்” பா.ஜ.க. பெண் அமைச்சர் அதிரடி

மத்திய பிரதேசத்தில் முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. இதில் கலாசாரத்துறை அமைச்சராக இருப்பவர் உஷா தாக்கூர். இவர் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில்,

‘‘கட்சி விழாக்களின்போது என்னுடன் செல்பி எடுத்துக் கொள்ள விரும்பும் தொண்டர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் அந்த பகுதி பா.ஜ.கவின் வளர்ச்சிக்காக ரூ.100ஐ கட்டணமாக செலுத்தவேண்டும். ஏனெனில், செல்பி எடுப்பதால் முக்கிய பணிகளுக்கு நான் செல்வதில் தாமதம் ஏற்படுகிறது’’ - என்று அதிரடியாக தெரிவித்துள்ளார்.

மேலும், தனக்கு மலர்மாலைகள், பூங்கொத்துகள் அளிப்பதற்கு பதிலாக புத்தகங்கள் தரும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கு அவர் கூறியுள்ள காரணம், ‘பரிசுத்தமான சுவாமி கிருஷ்ணருக்கு மட்டுமே பூக்களை காணிக்கையாக தர வேண்டும். ஏனெனில், அவற்றில் கடவுளான லஷ்மி குடிகொண்டுள்ளார்’ என்பதுதான்.

ஜாமியா பல்கலைக்கழக வளாகத்தில் டேனிஷ் சித்திக்கின் உடல் நல்லடக்கம்

தலிபான்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த ‘புலிட்சர்’ விருதுபெற்ற புகைப்படக் கலைஞர் டேனிஷ் சித்திக்கின் உடல் டில்லி ஜாமியா பல்கலை வளாகத்திலுள்ள அடக்கஸ்தலத்தில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

மும்பையைச் சேர்ந்த டேனிஷ் சித்திக் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தில் மூத்த புகைப்படக் கலைஞராக பணியாற்றி வந்தார். ரோஹிங்கியா அகதிகளின் அவலம் குறித்து இவர் எடுத்த புகைப்படங்கள் இவருக்கு புலிட்சர் விருதை பெற்றுக்கொடுத்தது. ஆப்கானிஸ்தானில் அரச படைகளுக்கும் தலிபான் பயங்கரவாத அமைப்பினருக்கும் இடையில் நடந்துவரும் மோதலை புகைப்படம் எடுக்கச் சென்ற குழுவில் இடம்பிடித்திருந்தார்.

சித்திக்கின் ரோஹிங்கியா அகதிகளின் அவலத்தை எடுத்துரைக்கும் புகைப்படம்.....

கடந்த 16ஆம் திகதி ஆப்கனின் கந்தகர் பகுதியில் தலிபான் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படையினருடன் இருந்த சித்திக் பரிதாபமாக உயிரிழந்தார்.

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் வெளியுறவு அமைச்சு எடுத்த முயற்சியால் அவர் உடல் நேற்றுமுன்தினம் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டு நேற்று ஜாமியா மில்லியா இஸ்லாமிய கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆப்கான் அதிகாரிகள் அளித்துள்ள டேனிஷ் பிரேத பரிசோதனை அறிக்கையில், அவர் உடலில் ஏராளமான துப்பாக்கித் தோட்டாக்கள் பாய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது உடலை டில்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலை வளாகத்திலுள்ள அடக்க ஸ்தலத்தில் நல்லடக்கம் செய்ய அதன் துணை வேந்தர் அனுமதியளித்துள்ளார்.

டேனிஷ் சித்திக் ஜாமியா பல்கலையின் முன்னாள் மாணவர். இவரின் தந்தை அக்தர் சித்திக் இந்த பல்கலைக்கழகத்தின் வேந்தராக பணியாற்றியவர். டேனிஷின் பெற்றோர் முன்வைத்த கோரிக்கையை ஏற்று அவரது உடலை பல்கலைக்கழக வளாக அடக்க ஸ்தலத்தில் நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இங்கு பல்கலை ஊழியர்கள் அவர்களின் வாழ்க்கைத்துணை மற்றும் அவர்களின் மைனர் குழந்தைகளை அடக்கம்செய்ய மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

வாடிவாசலில் களமிறங்கும் இயக்குநர் அமீர்

நடிகர் சூர்யா நடிப்பில் கடந்த வருடம் வெளியான ’சூரரைப் போற்று’ ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதைத்தொடர்ந்து நடிகர் சூர்யா தற்போது பாண்டிராஜ் இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகிவரும் புதிய படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இதற்கிடையில் கடந்த வருடம் கலைப்புலி எஸ்.தாணு தயாரிப்பில் இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு வெளியாகியிருந்தது. அப்போது படத்தின் தலைப்பு ‘வாடிவாசல்’ என்று மட்டுமே அறிவிக்கப்பட்டிருந்தது.

சில நாட்களுக்கு முன் ‘வாடிவாசல்’ திரைப்படத்தின் முதல் பார்வை வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுவந்த நிலையில், அந்தப் படத்தில் இயக்குநர் அமீர் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளியான வடசென்னை படத்தில் ராஜன் என்கிற முக்கியக் கதாபாத்திரத்தில் அமீர் நடித்திருந்தார். படம் வெளியான பின் அந்தக் கதாப்பாத்திரத்திற்காகவே அதிகம் பேசப்பட்டார். தற்போது வாடிவாசல் படத்தில் மீண்டும் வெற்றிமாறனுடன் இணைய இருப்பதால் ரசிகர்கள் மத்தியில் பெரிய ஆவல் எழுந்துள்ளது.

திருப்பதி ஏழுமலையானுக்கு ஒரு கோடியில் தங்க கத்தி

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு ஐதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் ஒரு கோடி ரூபா (இந்திய மதிப்பில்) தங்க கத்தியை காணிக்கையாக வழங்கியுள்ளார்.

தொழிலதிபர் எம்.எஸ்.பிரசாத் என்பவர் கோவையைச் சேர்ந்த தங்க வடிவமைப்பு நிபுணர்களைக்கொண்டு ஆறு மாதமாக 6.5 கிலோ எடையுள்ள தங்கத்தால் கத்தியை (சூரிய கடாரி) தயார் செய்துள்ளார்.

நேற்றுக் காலை ஏழுமலையானை தரிசனம் செய்த பின்னர், தங்க கத்தியை தேவஸ்தான அதிகாரி தர்மா ரெட்டியிடம் வழங்கினார். அவருக்கு ரங்கநாதர் மண்டபத்தில் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

கறிக்கடைக்கு போகும் எங்களுக்கு எதுக்குப்பா மாஸ்க்... எங்க மேலேதான் எவ்வளவு அக்கறை உங்களுக்கு..!

உத்தரபிரதேசத்தில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடுகளுக்கு மாஸ்க் அணிவிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டுசெல்லும் காட்சியே இது...

கேரளாவில் அமுலுக்கு வருகிறது ‘பிங்க்’

பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்கும் புதிய திட்டம்

பெண்களுக்கு எதிரான வரதட்சணை கொடுமை, பொது இடங்களில் நடக்கும் வன்முறை ஆகியவற்றை தடுக்க கேரளாவில் ‘பிங்க்’ பாதுகாப்புத் திட்டம் நேற்றுமுதல் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து கேரளாவில் முதலமைச்சர் பினராயி விஜயன் ‘‘கொரோனா ஊரடங்கு காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மிகவும் அதிகரித்துள்ளன. பெண்களை பாதுகாக்க ‘பிங்க்’ பாதுகாப்புத் திட்டம் ஜூலை 19 முதல் செயற்படுத்தப்படும்’’ என சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ‘பிங்க்’ பாதுகாப்புத் திட்டம் நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ளது.

இது குறித்து பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், ‘பிங்க்’ பாதுகாப்புத் திட்டத்தில் நன்கு பயிற்சிபெற்ற பெண் பொலிஸ் அதிகாரிகள் பணியாற்றுவர். வரதட்சணை கொடுமை உள்ளிட்ட வன்முறைகளால் பெண்கள் பாதிக்கப்படுவது தெரிந்தால் அதுபற்றி விசாரிக்க ‘பிங்க்’ பாதுகாப்புத் திட்டத்தில் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதிலுள்ள பெண் பொலிஸார் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் பக்கத்து வீட்டினர் உள்ளூர் மக்களிடம் விசாரித்து தகவல்களை சேகரித்து அப்பகுதி பொலிஸ் நிலையத்தில் தெரிவிப்பர். அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர். பஸ் நிலையங்கள், கல்லூரி வாயில்கள் கூட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் சாதாரண உடையில் பெண் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு பெண்களிடம் வன்முறை மற்றும் தவறாக நடந்து கொள்வோரை கண்காணித்து பிடிப்பர். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

2022இல் வெளிவரவிருக்கிறது பொன்னியின் செல்வன் - I



மணி ரத்னம் இயக்கும் பொன்னியின் செல்வன் பாகம் ஒன்று திரைப்படத்தின் போஸ்டர் வெளியாகியுள்ளது. எழுத்தாளர் கல்கி எழுதிய புகழ்பெற்ற வரலாற்று நாவலான பொன்னியின் செல்வன் கதையைப் படமாக்கி வருகிறார் இயக்குநர் மணி ரத்னம்.

விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, விக்ரம் பிரபு, சரத் குமார், பிரபு, ஜெயராம், ரஹ்மான், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஐஸ்வர்யா லக்ஷ்மி, அஸ்வின், கிஷோர் உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். படத்தின் திரைக்கதையை மணி ரத்னமும் குமரவேலும் இணைந்து உருவாக்கியுள்ளார்கள். வசனம் - ஜெயமோகன், இசை - ஏ.ஆர். ரஹ்மான், ஒளிப்பதிவாளர் - ரவி வர்மன். மெட்ராஸ் டாக்கீஸும் லைகா நிறுவனமும் இணைந்து தயாரிக்கின்றன.

பொன்னியின் செல்வன் படம் இரு பாகங்களாக வெளிவரவுள்ளது. இதையடுத்து பொன்னியின் செல்வன் படத்தின் முதல் பாகத்தின் புதிய போஸ்டர் நேற்று வெளியானது. போஸ்டரில் ஏ.ஆர்.ரஹ்மான், ரவி வர்மன், தோட்டா தரணி, ஸ்ரீகர் பிரசாத், ஜெயமோகன் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. படம் 2022இல் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புனித ஹஜ் யாத்திரை ஆரம்பம்

5 இலட்சம் பேர் விண்ணப்பம்; 60 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதி

கொரோனா பரவலுக்கு நடுவே குறைந்தளவிலான யாத்திரிகர்களுடன் புனித ஹஜ் கடமை தொடங்கியுள்ளது.

இஸ்லாமியர்களின் புனித நகரமான மக்காவிலுள்ள ஹஜ்ஜிக்கு செல்ல நடப்பாண்டு 5 இலட்சத்து 58 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் 60 ஆயிரம் பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள்.

மற்ற நாடுகளைச் சேர்ந்த யாத்திரிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், சவூதியில் குடியிருப்பவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 6 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

அவர்களும் சிறு சிறு குழுக்களாகவும், சமூக இடைவெளியுடன் கஃபாவை சுற்றி வரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சருக்கு கொரோனா: தனிமையில் பிரதமர் பொரிஸ்

பிரிட்டன் சுகாதாரத்துறை அமைச்சர் ஜாவித்துக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவருடன் தொடர்பிலிருந்தவர் என்ற முறையில் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்.

அமைச்சர் ஜாவித்துக்கு கொரோனா உறுதி யான உடனேயே பிரதமர் பொரிஸ் ஜோன் சன், நிதியமைச்சர் ரிஷி சுனக் உள்ளிட்டவர் களை தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு வலியுறுத்தி பிரிட்டனின் கொரோனா எச்சரிக்கை செயலி தகவல் அனுப்பியது.

எனினும், கொரோனா நோயாளிகளுடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்திக் கொள்வது கட்டாயமில்லை என்ற சூழலில், பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தனது அலுவல்களை தொடர்ந்து கவனிப்பார் என்று முதலில் கூறப்பட்டது. எனினும், அவர் தனிமைப்படுத்திக்கொள்ளவிருப்பதாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

கற்களுக்கு ஓவியத்தால் உயிர் கொடுத்த ஆசிரியை

சீனாவின் மஞ்சள் ஆற்றில் கிடைக்கும் கற்களுக்கு தனது ஓவியத்திறமையால் ஓவிய ஆசிரியை உயிர் கொடுத்து வருகிறார்.

Ma Yulan என்ற அந்த ஆசிரியை, அவர் பணியாற்றும் பாடசாலையில் புதிதாக ஓவிய வகுப்பொன்றை தொடங்க திட்டமிட்டபோது இந்த யோசனை அவருக்கு தோன்றியுள்ளது. அதன்பின்னர் இத்தகைய கல்லோவியங்களை வடித்துவரும் இவர், ஒவ்வொரு கற்களின் வடிவம் மற்றும் வண்ணத்திற்கேற்ப ஓவியத்தை முடிவுசெய்து உருவம் கொடுப்பதாக கூறுகிறார்.

மஞ்சள் நதி பாய்ந்தோடும் தனது சொந்த ஊரான லான்சவ் நகரின் மீதான அன்பை வெளிப்படுத்தும் விதமாக மஞ்சள் ஆற்றின் கற்களில் இந்த ஓவிய படைப்புகளை உருவாக்கி வருவதாகவும் தெரிவித்தார்.

வெள்ளத்தில் மிதக்கும் ஜேர்மன்.... இதுவரை 143 பேர் உயிரிழப்பு

ஆசியாவின் கொவிட் மையமாகும் இந்தோனேஷியா

17 நாட்களில் 115 மருத்துவர்கள் பலி

உலகம் முழுவதும் 19.13 கோடி பேர் பாதிப்பு

உறவுகளில் உயிர்க்காக்க ஒட்சிசன் பெற்றுக்கொள்ள காத்திருக்கும் இந்தோனேஷிய வாசிகள்....

இந்தோனேஷியாவில் இந்த மாதத்தின் முதல் 17 நாட்களில் மட்டும் கொரோனாவால் 115 மருத்துவர்கள் உயிரிழந்துள்ளனர். இது ஒரே மாதத்தில் உயிரிழந்த மருத்துவர்களின் அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

இந்தோனேஷியாவில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. டெல்ட்டா வகை வைரஸ் பல்வேறு பகுதிகளிலும் தீவிரமாக பரவி வருகிறது. இதனால் தற்போது ஆசியாவில் கொவிட் பெருந்தொற்றின் மையப்பகுதியாக இந்தோனேஷியா மாறியுள்ளது.

இந்தோனேஷியாவில் கிராமப் பகுதிகளே அதிகமாகவுள்ளன. அங்கு போதுமான மருத்துவமனை மற்றும் மருத்துவ வசதிகள் இல்லை. இதனால் நோயில் சிக்கியவர்கள் சிகிச்சை கிடைக்காமலேயே செத்து மடியும் அவலம் ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சுமார் 50ஆயிரம் பேர் பாதிக்கப்படுவதுடன், கொரோனா நோயாளர்களுக்கான ஒட்சிசன் பற்றாக்குறையும் நிலவி வருகிறது.

இதுகுறித்து இந்தோனேஷிய மருத்துவர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் கொரோனாவால் உயிரிழந்த மருத்துவர்களில் 20 சதவீதம் பேர் ஜூலை முதலாம் திகதிமுதல் 17ஆம் திகதிவரையிலான காலகட்டத்தில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவில் இதுவரை 545 மருத்துவர்கள் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

அந்த நாட்டில் நேற்று ஒரேநாளில் மட்டும் புதிதாக 44,721 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 1,093 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேஷியா முழுவதும் இதுவரை 28,77,476 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 73,582 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகம் முழுவதும் 19.13கோடி பேர் பாதிப்பு

இந்நிலையில் அ உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 19,13,18,766 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 41,05,868 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனா பாதிக்கப்பட்டோரில் 17,41,85,486 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கொரானாவால் பாதிக்கப்பட்டோரில் 1,29,40,604 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 80,570 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு விகிதங்களின்படி உலகளாவிய ரீதியில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலையிலுள்ளன.

அந்தவகையில் அமெரிக்காவில் இதுவரை 3,49,63,907 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6,24,746 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் இதுவரை 3,11,44,229 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,14,141 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு பிரேஸிலில் 1,93,76,574 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5,42,262 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலக செய்திகள்

சீனாவில் கிளம்புகிறது 'குரங்கு பி' வைரஸ்

கால்நடை மருத்துவர் ஒருவர் உயிரிழப்பு

கொரோனாவை தொடர்ந்து சீனாவிலிருந்து புதுசு புதுசா வைரஸ் கிளம்புகிறது. இங்கு 'குரங்கு பி' வைரஸ் தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கால்நடை மருத்துவர் ஒருவர் (வயது 53) இரண்டு குரங்குகளுக்கு உடற்கூறாய்வு செய்திருக்கிறார். சில மாதங்களுக்குப் பின் குமட்டல், வாந்தி, காய்ச்சல், நரம்பு பாதிப்பால் அவதிப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், கடந்த மே 27இல் உயிரிழந்துள்ளார். இவரது எச்சில், இரத்த மாதிரிகளை ஆய்வு செய்ததில் 'குரங்கு பி' வைரஸ் தொற்று இருந்தது கண்டறியப்பட்டது. 'குரங்கு பி' வைரஸ் தாக்கி ஒருவர் முதல் முறையாக பலியானது சீனாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைரஸ் மகாக்ஸ் வகை குரங்குகளில் 1932இல் கண்டறியப்பட்டது. இது நேரடி கழிவுகள், சுரப்பிகள் மூலம் பரவும். இதில் இறப்பு சதவீதம் (70-80) அதிகம். குரங்கு, மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பவர்கள், ஆய்வு மைய பணியாளர்கள் கூடுதல் பாதுகாப்புடன் இருக்கும்படி சீனாவின் நோய் கட்டுப்பாட்டு தடுப்பு மையம் அறிவுறுத்தியுள்ளது.

மனிதர்களை 'குரங்கு பி' வைரஸ் தாக்கும்போது 1-3 வாரங்களில் அறிகுறிகள் தென்படும். பின் மத்திய நரம்பு மண்டலத்தை தாக்கி மரணத்தை ஏற்படுத்தும்.

சர்வதேச கேன்ஸ் திரைப்பட விழா: பாம் டி'ஓர் விருது வென்ற 'டைடேன்'

கேன்ஸ் திரைப்பட விழாவில், 'டைடேன்' என்ற பிரான்ஸ் படத்துக்கு பாம் டி'ஓர் என்ற மிக உயரிய விருது வழங்கப்பட்டது.

உலகப் புகழ்பெற்ற கேன்ஸ் திரைப்பட விழா, ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் பிரான்ஸின் கேன்ஸ் நகரில் நடைபெறும். கடந்த 2019இல் நடந்த விழாவில், தென்கொரியாவின் 'பாராசைட்' என்ற படம் பாம் டி'ஓர் விருது வென்றது. கடந்த 2020இல் கொரோனா பரவல் காரணமாக கேன்ஸ் திரைப்பட விழா இரத்துச்செய்யப்பட்டது.

இந்நிலையில், 74ஆவது கேன்ஸ் திரைப்பட விழா கடந்த 6ஆம் திகதி ஆரம்பமானது.

தினமும் சர்வதேச படங்கள் திரையிடப்பட்ட நிலையில், இறுதிநாளில் விருது வழங்கும் விழா நடந்தது. இதில், மிக உயரிய பாம் டி'ஓர் (Palme d'Or prize) விருதை பிரான்ஸ் படமான 'டைடேன்' தட்டிச்சென்றது.

இப்படத்தின் இயக்குனர் ஜூலியா டூகோர்னா விருதை பெற்றுக்கொண்டார். பாம் டி'ஓர் விருது பெறும் 2ஆவது பெண் என்ற பெருமை ஜூலியா டூகோர்னாவுக்கு கிடைத்துள்ளது. சிறந்த நடிகருக்கான விருது, அமெரிக்காவைச் சேர்ந்த காலேப் லாண்ட்ரி ஜோன்ஸ், சிறந்த நடிகைக்கான விருது நோர்வேயைச் சேர்ந்த ரெனடா ரீன்ஸ்வே, சிறந்த இயக்குனருக்கான விருது லியோஸ் காரக்ஸ் பெற்றனர்.

சிறந்த திரைக்கதைக்கான விருதை 'டிரைவ் மை கார்' என்ற படத்துக்காக ஜப்பானைச் சேர்ந்த ஹாமாகுச்சி பெற்றார்.

கேன்ஸ் திரைப்பட விழா சிவப்பு கம்பள வரவேற்பில் ஒய்யார நடைபோட்ட நடிகை எமி ஜக்ஷன்...

கட்டாய வெற்றியை நோக்கி இன்று களமிறங்கும் இலங்கை

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நிலையில், இன்று நடைபெறுகின்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டிய நிலையில் இலங்கை அணி களமிறங்குகிறது.

ஷிகர் தவான் தலைமையிலான சுற்றுலா இந்திய அணிக்கும், தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இருதரப்பு கிரிக்கெட் தொடரின் முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 262 ஓட்டங்களைக் குவித்தது.

263 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 36.4 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்த நிலையில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணிக்கு அதிரடியான ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்த இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பிரித்வி ஷா தெரிவானார்.

இலங்கை அணி, இந்திய அணியுடன் ஒருநாள் சர்வதேச போட்டியில் வெற்றி பெற்று நான்கு வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இந்திய அணியுடன் ஒருநாள் தொடரை வெற்றிகொண்டு 24 வருடங்கள் ஆகின்றன. எனவே, இன்று நடைபெறுகின்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றால் மாத்திரமே, தோல்வியிலிருந்து தப்பி தொடரைத் தக்கவைக்க முடியும்.

அந்த அடிப்படையில் இன்று கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறுகின்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி எவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவந்து போட்டியில் வெற்றி பெற முயற்சிக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

போட்டியின் சுருக்கம்

இலங்கை – 262/9 (50)

துடுப்பாட்டம் : சமிக கருணாரத்ன 43 (35), தசுன் சானக்க 39 (50)

பந்துவீச்சு : தீபக் சஹார் 2/37 (7), குல்தீப் யாதவ் 2/48 (9)

இந்தியா – 263/3 (36.4)

துடுப்பாட்டம் : ஷிகர் தவான் 86 (95), இஷன் கிஷான் 59 (42)

பந்துவீச்சு : தனஞ்சய டி சில்வா 2/49 (5), லக்ஷான் சந்தகான் 1/53 (8.4)

ஒலிம்பிக்கில் களமிறங்கும் முதலாவது திருநங்கை

ஒலிம்பிக் போட்டியில் விளையாடப்போகும் முதல் திருநங்கை என்ற வரலாற்றுச் சிறப்பை, இன்னும் 3 நாட்களில் ஆரம்பமாகவுள்ள 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் நியூஸிலாந்து அணிக்காக பளுதூக்குதலில் களமிறங்கும் லோரல் ஹப்பர்ட் பெறக் காத்திருக்கிறார்.

43 வயதான லோரல் ஹப்பர்ட் இளம் வயதிலேயே பளுதூக்குதலில் கவனம் செலுத்தினார். 2012ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஆண்களுக்கான பளுதூக்குதல் போட்டிகளில் பங்கேற்று வந்த அவர் அதன் பிறகு உடலில் மாற்றங்களை உணர்ந்து மூன்றாம் பாலினத்தவரான (திருநங்கையாக) மாறினார். 2017ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்க பளுதூக்குதலில் தங்கப்பதக்கம் வென்ற அவர், 2019ஆம் ஆண்டு பசிபிக் விளையாட்டிலும், 2020ஆம் ஆண்டு ரோமில் நடந்த ரோமா உலகக்கிண்ணத்திலும் மகுடம் சூடினார்.

திருநங்கைகள் பெண்களோடு மோதுவதை அனுமதித்த சர்வதேச ஒலிம்பிக் பேரவையானது அவர்களுக்கென்று பிரத்தியேக விதிமுறைகளை வகுத்துள்ளது. அதில், போட்டியில் கலந்துகொள்வதற்கு ஓராண்டுக்கு முன்பாக அவர்களின் டெஸ்டோஸ்டிரோனின் (ஆண்களுக்கான ஹோர்மோன்) அளவு, ஒரு லீற்றருக்கு 10க்கும் குறைவான நானோமோல்ஸ் என்ற நிலையில் இருக்க வேண்டும் என்பது முக்கியமான விதியாகும். இதனடிப்படையில் கடந்த மாதம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான நியூஸிலாந்து அணிக்கு லோரல் ஹப்பார்ட் தேர்வு செய்யப்பட்டார்.

புதிய மூன்று நாடுகளுக்கு அங்கத்துவம் வழங்கிய ஐ.சி.சி.

கிரிக்கெட் உலகை நிர்வகிக்கின்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையானது தனது புதிய உறுப்பு நாடுகளான மங்கோலியா, தஜிகிஸ்தான் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளை 78ஆவது ஆண்டு பொதுக் கூட்டத்தில் அங்கத்துவ நாடுகளாக வரவேற்றது.

மங்கோலியா மற்றும் தஜிகிஸ்தானை ஆசிய பிராந்தியத்தின் 22ஆவது மற்றும் 23அவது உறுப்பினர்களாக வரவேற்றது. அதே நேரத்தில் சுவிட்ஸர்லாந்து ஐரோப்பாவின் 35ஆவது உறுப்பினராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச கிரிக்கெட் பேரவையானது தற்போது மொத்தம் 106 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதில் 12 நாடுகள் டெஸ்ட் அந்தஸ்துடைய நாடுகளாகவும், ஏனைய 94 நாடுகளும் டெஸ்ட் அந்தஸ்து பெறாத நாடுகளாகவும் காணப்படுன்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

முதல் இந்திய வீரராக சாதனை படைத்த இஷான் கிஷன்

இலங்கை அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் அரைச்சதம் கடந்த இஷான் கிஷன், இந்திய கிரிக்கெட் வரலாற்றில் அறிமுக ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளில் அரைச்சதம் கடந்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

சுற்றுலா இந்திய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது. குறித்த போட்டியின்போது சூர்யகுமார் யாதவ் மற்றும் இஷான் கிஷன் ஆகிய இரு வீரர்கள் இந்திய அணியில் ஒருநாள் அறிமுகம் பெற்றனர்.

கன்னி ஒருநாள் போட்டியில் விளையாடிய விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான இஷான் கிஷன், துடுப்பாட்டத்தில் 42 பந்துகளை சந்தித்து 2 சிக்ஸர்கள், 8 பௌண்டரிகளுடன் அரைச்சதம் கடந்து 59 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். கடந்த மார்ச் மாதம் இங்கிலாந்து அணியுடன் இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் அறிமுகம் பெற்றுக்கொண்ட இஷான் கிஷன் தனது அறிமுகப் போட்டியிலேயே அரைச்சதம் கடந்து அசத்தினார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இலங்கை அணியுடன் ஒருநாள் அறிமுகம் பெற்று அந்தப் போட்டியிலும் அரைச் சதத்தைக் கடந்து, கன்னி ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளில் அரைச்சதம் கடந்த முதலாவது இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

கொடி, தேசிய கீதம் இல்லாத ரஷ்யாவின் ஒலிம்பிக் அணி

(ரமணி)

ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் மேடையில் நிற்கும்போது அவர்களின் நாட்டு கொடியேற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்படும்போது நெஞ்சை நிமிர்த்தி மரியாதை செலுத்துவது வழமையானது. அப்படியான சந்தர்ப்பத்தை இம்முறை ரஷ்ய அணி தவறவிடவுள்ளது.

வெற்றி பெற்றவர்களுக்கு விருது வழங்கும்போது ரஷ்ய தேசியகீதத்துக்குப் பதிலாக ரஷ்ய இசையமைப்பாளர் சாய்கோவ்ஸ்கியின் இசை ஒலிக்கப்படும். ரஷ்ய விளையாட்டு வீரர்கள் ஊக்கமருந்து பாவித்தமை உறுதி செய்யப்பட்டதால் முக்கியமான விளையாட்டுப் போட்டிகளில் ரஷ்யாவுக்குத் தடை விதிக்கப்பட்டது.

ரஷ்ய வீரர்கள் ஊக்கமருந்து பாவித்தமைக்கான சான்றுகள் 2014ஆம் ஆண்டு வெளிவந்த பின்னர், 2019 டிசம்பரில் ரஷ்யாவுக்கு சர்வதேச விளையாட்டிலிருந்து

நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும் அத்தடை பின்னர் பாதியாகக் குறைக்கப்பட்டது. இதையடுத்து டோக்கியோ ஒலிம்பிக்கில் போட்டியிட ஊக்கமருந்து பின்னணியில்லாத சில ரஷ்ய விளையாட்டு வீரர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆனால், அவர்கள் முறையாக தங்கள் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார்கள். 2016 ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக், 2018 பியோங்சாங் குளிர்கால விளையாட்டுக்களுக்கு, ரஷ்யா குறைக்கப்பட்ட வீரர்களை அனுப்பியது. இந்நிலையில் 330க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களை ரஷ்யா டோக்கியோவுக்கு அனுப்புகிறது. ரோயிங் அணியைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையால் சரியான எண்ணிக்கை இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

1991இல் சோவியத் யூனியன் பிரிந்ததிலிருந்து இது இரண்டாவது மிகக் குறைந்த எண்ணிக்கையாகும். 16 வயதான ஜிம்னாஸ்ட் விக்டோரியா லிஸ்டுனோவாவும், 56 வயதான டிரஸ்ஸேஜ் ரைடர் இன்னெஸா மெர்குலோவாவும் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர். பதக்க எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தைப் பெற இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் வழக்கமான வலுவான விளையாட்டுகளான ஜிம்னாஸ்டிக்ஸ், நீச்சல், மல்யுத்தம், ஃபென்சிங், ஜூடோ போன்றவற்றில் தங்கப்பதக்கம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சில வீரர்களின் சான்றிதழ்கள் இன்னமும் கிடைக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட நடுநிலை தடகள சான்றிதழ் உள்ளவர்கள் மட்டுமே டோக்கியோவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ரஷ்ய தேசியக்கொடியிலுள்ள நிறங்களுடனான சீருடைகளை ரஷ்ய வீரர்கள் அணிவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்த இங்கிலாந்து

T20 தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி இன்று

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணிக்கு பதிலடி கொடுத்தது.

சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இருதரப்புக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் தற்சமயம் நடைபெற்று வருகிறது. முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்ற நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் லீட்ஸில் அமைந்துள்ள ஹெடிங்லி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 200 ஓட்டங்களைக் குவித்தது. 201 என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதனடிப்படையில் 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை 1-1 என்ற அடிப்படையில் சமநிலைப்படுத்தியது. போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என இரண்டு துறைகளிலும் சிறப்பாக செயற்பட்ட மொயின் அலி தெரிவானார். இருபதுக்கு இருபது தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கின்ற மூன்றாவதும் இறுதியுமான போட்டி இன்று மென்செஸ்டரில் நடைபெறுகின்றது.

போட்டியின் சுருக்கம்

இங்கிலாந்து - 200/10 (19.5)

துடுப்பாட்டம் : ஜொஸ் பட்லர் 59 (39), லியம் லிவிங்ஸ்டன் 38 (23)

பந்துவீச்சு : மொஹமட் ஹஸ்னைன் 3/51 (4), இமாட் வஸீம் 2/37 (4)

பாகிஸ்தான் - 155/9 (20)

துடுப்பாட்டம் : மொஹமட் றிஸ்வான் 37 (29), சதாப் கான் 36 (22)

பந்துவீச்சு : ஷாகிப் மஃமூத் 3/33 (4), ஆதில் ரஷீட் 2/30 (4)

டோக்கியோ ஒலிம்பிக் -2020 இன்னும் 03 நாட்கள்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7